முரசொலி

வார இதழ்

ஆசிரியர்:
மு.கருணாநிதி

முரசு 4 | 15-11-57 | வெள்ளி | ஒலி 30

விடுதலை வீரன்

கூண்டிலே!

"ஆட்சிக் கொடியை நெருப்பிலே போட்டார்கள்—சட்டத்தை சுட்டெரித்தார்கள்—பாதுகாப்புப் படையின் மீதும் தங்கள் பாய்ச்சலை நடத்தினார்கள்! பயங்கரமான நடவடிக்கைகள் - பாதைகள் பல பாழ்பட்டன; பாலங்கள் இடிக்கப்பட்டன; மந்திரிகள் கூடிப் பேசும் மாமன்றம் மண்மேடாகிவிட்டது இவர்களது வெறிச் செயல்களால்! வண்முட்ட நின்ற நமது கொடிக் கம்பத்திலே இவர்களது விடுதலைக் கொடியைப் பறக்கவிட்டு சுதந்திரகீதம் பாடினார்கள். பாசறைகளில் தீ கொழுந்து விடவும்—பாராளும் வேந்தன் ஓய்வு பெறும் மாளிகையில் வெள்ளம் நுழையவும்—கோட்டை கொத்தளங்களில் காவல் புரிந்த வீரர்கள் ஓட்டமெடுக்கவுமான மூர்க்கப் போராட்டம் மூட்டி விடப்பட்டது! அடுத்த நாட்டு மன்னரின் அவசர உதவி உடனடியாக நமக்குக் கிடைக்காமற் போயிருந்தால் ஆட்சியும் கவிழ்ந்திருக்கும்; இந்த அராஜகவாதிகளும் ஆட்சிச் சக்கரத்தை இன்னேரம் உருட்ட ஆரம்பித்திருப்பார்கள். நல்ல வேளை; நாம் செய்த பூஜாபலன் நமது உயிரும், நமது மன்னர் உயிரும் காப்பாற்றப்பட்டதோடு, கயவர்கள் பிடியிலே நாடு சிக்காமலும் மீட்கப்பட்டது. அவையோர்களே! புயலுக்குப்பின் எழுந்துள்ள அமைதியான நிலைமையை நினைத்து ஆறுதல் பெறுவது ஒரு புறமிருக்கட்டும். புயல் கிளம்புவதற்குக் காரணமாயிருந்த இந்தப் புரட்சிக்காரனை—விடுதலை இயக்கத்தின் தலைவனை விசாரணை செய்து தீர்ப்பு கூற வேண்டிய அவசர, அவசியமான கட்டத்திலேயிருக்கிறோம் நாம்! சொல்லப்போனால் இவன் புரட்சிக்காரன் மட்டுமல்ல; மகா பயங்கரவாதி-பயங்கரவாதி மட்டுமல்ல; படுநாசம் விளைவிக்கச் சிறிதும் தயங்காத பரமபாதகன் — பாராளும் மாமன்றத்திலே இவன் ஒரு பிரதிநிதி—தனி ஆளாக நின்று இதுவரையில் நமது ஆட்சியைச் சட்ட பூர்வமாகக் குறை கூறி வந்தவன்—தனக்குப் பின் லட்சோப லட்சம் பயங்கரவாதிகளை 'அணிவகுத்து நிறுத்தித்,' திடீரென ஆட்சியைக் கவிழ்ப்பதற்குப் பலாத்காரத்தின் துணையை நாடியிருக்கிறான். இவன் லட்சியம் நிறைவேறி நாமெல்லாம் இவன் கையில் அகப்பட்டிருப்போமேயானால் நமது எலும்புகளைக்கூட நமது அன்புக்குரிய குடும்பத்தாரிடமோ, நண்பர்களிடமோ தருவதாக உத்தேசமில்லை இந்த விடுதலை இயக்கத்திற்கு! இந்த நாட்டுக்குரிய பெயரை அளிக்க மறுத்தோமாம்! சாதி வெறிக்குத் தூபமிட்டோமாம்! மொழியைப் பலியிடச் சதி செய்தோமாம்! கலாச்சாரத்திலே கைவைத்தோமாம்! அடுத்த நாட்டுக்காரனிடத்திலே இவர்களையெல்லாம் சேர்த்து அடமானம் வைத்தோமாம்! இப்படி ஆயிரக்கணக்கில் குற்றச்சாட்டுகள் விடுதலை இயக்கத்தினரால் நம் மீது சுமத்தப்படுகின்றன. இவைகளுக்கெல்லாம் ஆதாரமிருந்தாலும் இல்லாவிட்டாலும் ஏன் என்று கேட்கும் அதிகாரத்தை இவன் எப்படிப் பெற முடியும்? இவன் நமது ஆட்சிக்கு உட்பட்டவன். இந்த நாட்டில் நமது ஆட்சி வேரூன்றி நிலைக்கத் தேவையான நல்ல யோசனைகளை அளிப்பதற்கு மட்டுமே இவன் அனுமதிக்கப்படுவானேயன்றி ஆட்சியை மாற்றி அமைக்க வேண்டுமென்ற ஆணவ எண்ணமும்-அதன் காரணமாக மிருக வெறிப் போராட்டமும் தோன்றுவதற்கு ஒருக்காலும் இடந் தராது இந்த ஆட்சி பீடம்! ஆகவே-

"புனிதமான நாட்டுக் கொடியைக் கிழித்தது—

"போற்றுதற்குரிய நாட்டுப் பாடலை எரித்தது—

"பெருமைக்குரிய சட்டத்தை நெருப்பிலிட்டது—

"மாமன்றத்தைப் பாழாக்கியது-

"ஆட்சியைக் கவிழ்க்க சதி செய்தது—

ஆகிய இத்தனை பயங்கர நடவடிக்கைகளையும் தூண்டிவிட்ட குற்றம் விடுதலை இயக்கத்தின் தலைவனாகிய இவனையே சேருகிறது—அதனால் இவன் தண்டிக்கப்பட வேண்டியவன் — தலை துண்டிக்கப்பட வேண்டியவன்"

—ஆவேசமும் துடிப்பும் மிகுந்த உரையை முடித்துவிட்டு நீண்ட பெரு மூச்சுடன் இருக்கையில் அமர்ந்தார் மன்றப் பெரியவர்.

தும்பை மலர்போல் வெளுத்து தொப்பூழ் வரையில் தொங்கிக் கொண்டிருக்கும் அழகிய தாடி! நீண்ட பெருமூக்கு! அகன்ற கண்கள்! விரிந்த புருவம்! ஏறிய நெற்றி! ஏறுநடை! இளைஞனின் குரல்! இவ்வளவு லட்சணங்களும் கொண்ட அந்த முதியவர்தான் மன்றத்தின் மரியாதைக் குரியவர்!

அவரது நீண்ட பேச்சுக்குப் பிறகு, குற்றம் சாட்டப்பட்ட விடுதலைத் தலைவன் பேச வேண்டும். தான் குற்றமற்றவன் என்று நிரூபிக்க வேண்டும். தவறினால், மன்றம் அவனுக்குமரண தண்டனை வழங்கத் தயாராக இருக்கிறது.

அவன் என்னதான் முயன்றாலும் தன்னை நிரபராதி யென்று சாதிக்க முடியாது! நியாயம் அவன் பக்கமிருந்தாலும் நீதியின் தராசு அவன் பக்கம் சாய்ந்திருக்கவில்லை. அது அவனைத் தவறாக எடை போடவே தயாரிக்கப்பட்டு விட்டது.

மன்றத்துப் பெரியவராம் முது கிழவர், அவனைப் பற்றிய குற்றங்களை அடுக்கிக் காட்டி அவன் தண்டனைக் குரியவன் என்று வாதிடும்போது ஏனோ தெரியவில்லை; அந்தக் கூண்டிலே நிற்கும் வீரனின் விழிகளிலே நீர் ததும்பியது. அவன் இறுதியாகப் பேச ஆரம்பித்தான்.

"அவையோரே! அவையோரே! இந்த அவையில் நாட்டுப் பிரதிநிதிகளில் ஒருவனாக அமர்ந்திருந்த நான், இன்றைய தினம் கூண்டிலே நிறுத்தப்பட்டு — கோர விளையாட்டுகளுக்குக்காரணம் 'நானேதான்' என்று குற்றம் சாட்டப்பட்டு 'என்ன தண்டனை?' என்பதை மிக ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறேன். மன்றத்துப் பெரியவர் என்மீது தூண்டுதல்-பலாத்காரம்—மிருக வெறிச் செயல்—ஆகிய குற்றங்களை சுமத்தியிருக்கிறார். நாடு உங்கள் கையிலேயிருந்து விடுதலை பெற வேண்டுமென்ற எண்ணத்தை இந்த மன்றத்தில் பல முறை வெளியிட்டிருக்கிறேன். அதற்குப் பதிலாக உங்களுடைய கேலிப் பேச்சையும்—இழிவும் பழியும் மிகுந்த உரைகளையும் கேட்டிருக்கிறேன். சட்டத்தை மீறாத அளவில் எனது வாதங்களை எடுத்துரைத்து— எதிர் காலத்தைப் பற்றிய எச்சரிக்கையும் விடுத்து—'நாட்டிலே சுதந்திரக் கனல் மூண்டெழுகிறது; விடுதலை உணர்வு அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் உடைப்பெடுக்கிறது'—என்ற அறிவிப்

[தொடர்ச்சி பக்கம்—6]

★ கருணாநிதி ★

கற்பனை உரையாடல்

பண்டிதர் கண்ட 'பயங்கர'க் கனவு!

[நவம்பர் மாதம் 13-ந் தேதி இரவு 12-மணி! பண்டிதர் நேரு படுக்கையில் புரண்டு புரண்டு படுக்கிறார்! பொழுது விடிந்தால் அவரது 68-வது பிறந்த நாள் விழா! அவர் மனக் கண் முன்னே பலப் பலக் காட்சிகள் தோன்றி மறைகின்றன. சுவற்றிலே காந்தியார் படம் ஆடிக்கொண்டிருக்கிறது! திடீரென காந்தியார் அவர் முன்னே தோன்றுகிறார்! காந்தியாரைக் கண்டதும், நேருஜி தன் படுக்கையை விட்டு எழுந்து ஓடோடிப் போய் அவரைக் கட்டித் தழுவி ஆனந்தக் கண்ணீர் விடுகிறார்.]

நேரு: பாபுஜி!...எங்களை எல்லாம் இப்படித் தவிக்க விட்டு விட்டுப் போய்விட்டீர்களே, பாபுஜி! பெற்ற சுதந்திரத்தை அனுபவிக்காமல் போய் விட்டீர்களே!...

காந்தியார்: நானும் நீயும் மட்டும் அனுபவிப்பதற்காகவா, அவ்வளவு பாடுபட்டு சுதந்திரம் பெற்றோம் என எண்ணுகிறாய்? அப்பா...நேரு! நான் உங்களை விட்டுப் போய் விட்டாலும், இந்தப் பாழும் கண்கள் இந்தியாவைப் பார்த்துக் கொண்டுதானே இருக்கின்றன! ஆனால் என்னுடைய கனவுகளைத்தும் பகற் கனவுகளாகவே ஆகி விட்டனவே! இத்தகைய இந்தியாவைக் காண்பதற்காகவா, அவ்வளவு பாடுபட்டோம்? இதைக் காண்பதற்குத்தானா ஏராளமான இளைஞர்கள் தம் உயிரையே பலி கொடுத்தனர்? இதற்காகத்தானா கட்டபொம்மன் தூக்கிலே தொங்கினான்? சிதம்பரனார் செக்கிழுத்தார்?

நேரு: பாபுஜி! என்ன...? இது என்ன? ஏன் இப்படி ஒப்பாரி வைக்க ஆரம்பித்து விட்டீர்கள்? நாளை என் பிறந்த நாள் விழாவல்லவா; அதற்காகவாகிலும் மகிழ்ச்சியாக சிறிது நேரம் பேசுங்களேன்!

காந்தி: உனக்குப் பிறந்த நாள் விழாவாக இருக்கலாம்! உனக்குக் கொண்டாட்டமாக இருக்கலாம்! ஆனால் எனக்கு மகிழ்ச்சியாக இருக்க இயலவில்லையே! எதைப் பார்த்து மகிழ்ச்சியாக இருக்கச் சொல்லுகிறாய்? 'கஞ்சி குடிப்பதற்கின்றி, பஞ்சமோ பஞ்சமென்றும் பசியோ பசியென்றும்' பரிதவிக்கும் பல்லாயிரக் கணக்கான என் புதல்வர்களைப் பார்த்து மகிழ்ச்சியாக இருக்கச் சொல்கிறாயா? அப்பா நேரு!... "என்னுடைய கொள்கைளின் இலக்கணமாய்—ஏழை மக்களின் இன்னலைப் போக்கும் ஏந்தலாய்—தாழ்த்தப்பட்ட மக்களின் தந்தையாய்—ராம ராஜ்யத்தின் ராமனாய் வாழ்வாய்!" என்றெல்லாம் அன்று கனவுகள் கண்டேனே! ஐயோ! என் மனக்கோட்டைகள் யாவும் மணற் கோட்டைகளாகி இடிந்து விழுந்து மண்ணோடு மண்ணாகி விட்டனவே!

நேரு: என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்? ... ...அப்படி நான் என்னதான் செய்து விட்டேன்? தாங்கள் காட்டிய பாதையிலேதானே சென்று கொண்டிருக்கிறேன்! தங்களிடம் வந்த தேவதாஸ் காந்தி ஏதாவது கயிறு திரித்தாரோ; என்னவோ?

காந்தி: இல்லை; இல்லை!...நான் தான் எல்லா காட்சிகளையும் பார்த்துக் கொண்டிருக்கிறேனே! "காந்தியத்தைக் கடைப் பிடியுங்கள்!" என நீ செய்யும் பிரசங்கங்களையும் கேட்கிறேன்; அதே நேரத்திலே நீ இந்திராவோடு இணைபிரியாது, கோடி கோடியாய் செலவழித்து செய்யும் உல்லாசப் பயணங்கள்—ஆடம்பரமான வாழ்க்கை—எல்லாவற்றையும் இந்தப் பாழும் கண்கள் பார்த்துக் கொண்டுதானே இருக்கின்றன!

நேரு: பாபூஜி! இந்த நல்ல நாளிலே வந்து என் உள்ளத்தைப் புண்படுத்தாதீர்கள்! நான் ஏழை மக்களுக்குச் செய்யும் தொண்டுகளைத் தாங்கள் அறியாமல் ஏதோ உளறுகிறீர்கள்!



காந்தி: ஆமாம்; ஏழைகளின் காவலா! உம் குடியரசுத் தலைவர் இராஜேந்திர பிரசாத் வசிக்கும் ராஷ்டிரபதி பவனத்திற்குள்ளே வண்டிகளே செல்லக் கூடாதாமே! கார் வைத்திருப்பவர்கள்தான் குடியரசுத் தலைவர்களைக் காணலாமா?

நேரு: தாங்களும் திரு குமரப்பா போல் கூற ஆரம்பித்து விட்டீர்களே! அங்கே அடிக்கடி மிலிடரி லாரிகள் போகும்! எனவே, ஏதாவது விபத்து நேர்ந்தால் வண்டிக்காரர்கள் தானே விபத்தில் சிக்கி மாள்வார்கள்! வண்டிக்காரர்களின் நலத்தைக் கருதியேதான் அந்த ஏற்பாடு செய்யப்பட்டது!

காந்தி: ஒரு தனியான இடத்திலே இருவர் இருக்கிறார்கள்! இருவரில் ஒருவன் கத்தி வைத்திருக்கும் கொலைகாரன்! மற்றவன் ஏழை! நேரு, ஏழையைக் காப்பாற்ற நீர் என்ன செய்வீர்?......கொலைகாரனைப் பிடித்துத்தானே சிறையிலடைப்பீர்? அப்படியானால் விபத்தை விளைவிக்கக் கூடிய லாரிகளையல்லவா தடுக்க வேண்டும்! ஏழை வண்டிக்காரர்கள் வயிற்றிலா அடிப்பது? வாதத்தில் வல்லவரான வக்கீல் நேருவே! இதைக் குறித்து திரு. குமரப்பா கூறியபோது டெல்லி எம். பி.க்கள் விழுந்து விழுந்து சிரித்தார்களாமே! அந்த சிரிப்பொலி கேட்டு நீரும் சிரித்தீரல்லவா? ஏழைகளுக்காகப் பரிந்து பேசுபவர்களை எள்ளி நகையாடுவதுதான் இராம ராஜ்யமா?

நேரு: பாபூஜி! மன்னித்து விடுங்கள் பாபூஜி! நான் தாங்கள் காட்டிய வழியிலேயே நடக்கும்படி இன்றுவரை உபதேசித்து வருகிறேன்! ஆனால்...

காந்தி: ஆனால் என்ன?.......... "காந்தி காட்டிய வழியிலே நடக்கிறேன்!" எனக் கூறிக் கொண்டு கள்ளச் சாராயம் காய்ச்சும் கனவான்கள்—தன்னலந் துறந்த தியாகிகள் எனத் தமுக்கடித்துக் கொண்டு ஏழைகளின் இரத்தத்தை உறிஞ்சும் அட்டைகள்! பெண்கள் மூலம் பணமும் அந்தப் பணத்தின் மூலம் புகழும் சம்பாதிக்கும் பேய்கள்! கொள்கையை விற்றுக் கவுரவம் சம்பாதிக்கும் கனவான்கள்! கதராடையும், காவியாடையும் அணிந்து கள்ள மார்க்கெட் நடத்தும் கயவர்கள்! மதி கெட்ட மந்திரிகள்! வரி கொடாது கள்ளக் கடத்தல் செய்யும் அந்த மந்திரிமார்களின் மகன்கள்!......

நேரு: என்ன, மந்திரி மகன் கள்ளக் கடத்தல் செய்கிறானா?

காந்தி: ஆமாம்...அந்த அக்கிரமத்தையும் நான் பார்க்கத்தான் செய்கிறேன்! பஞ்சாப் பி. எஸ். பி. கட்சி எம். பி. "தலைசிறந்த வரிகொடா கள்ளக்கடத்தல் வியாபாரி ஒரு மந்திரியின் மகன்!...இதை என்னால் நிரூபிக்க முடியாவிட்டால் நான் சிறை செல்லவும் தயார்!" எனக் கூறியுள்ளார்.

நேரு:......போதும்! போதும்! பாபூஜி!...

காந்தி: போதுமா?...இன்னும் நிறைய இருக்கிறதப்பா! உன்னுடைய இந்தியாவின் படத்தைப் பார்! சிறிதுகூட வரி செலுத்தாது கோடிக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள தங்கம், வெள்ளி, முதலானவற்றை கள்ளக் கடத்தல் வியாபாரம் செய்யும் கோடீஸ்வரர்கள் வெளியே உல்லாசமாக இருக்கிறார்கள்! வயலிலே நெல் விளையாததினால் வரி செலுத்த இயலாத ஏழை விவசாயிகள் இரும்புக் கம்பிகளுள்ளே கண்ணீர் சிந்தி ஏங்கித் தவிக்கிறார்கள்! விண்ணை முட்டும் கோபுரங்கள்! தங்கத் தகடு போர்த்திய கோவில்கள்! தங்கத்தினால் வார்க்கப்பட்ட விக்ரகங்கள்! விக்ரகத்தை வணங்க வரும் பிரபுக்கள்! வாசலிலே நடு நடுங்கும் கைகளுடன்—'கையது கொண்டு மெய்யது போர்த்தி' கண்ணீர் சிந்தி நிற்கும் ஏழைப் பிச்சைக்காரர்கள்! இவ்வளவையும் பார்த்துக்கொண்டு, "ஏழை, பணக்காரன் ஏற்றத் தாழ்வை எப்படி அழிக்க இயலும்! அது அவர்கள் தலைவிதி" என இயம்பும் வேதாந்திகள்!

"ஏழைகளையும் நோயாளிகளையும் காப்பாற்றுவது—அவர்களுக்குத் தொண்டு செய்வது தான் கடவுளை வணங்குவது!" என்று நான் முன்பே கூறவில்லையா? ஆனால் என் பாதையிலே செல்கிறேன் எனக் கூறிக் கொண்டு எவ்வளவு பணத்தை வீணாக்குகிறார்கள்? பாரதியார் பக்தர்களாகிய தமிழர்கள்கூட இன்னும் திருந்தவில்லையே!

"உயிர்களெல்லாம் தெய்வமன்றிப் பிறவொன்றில்லை;
ஊர்வனவும் பறப்பனவும் நேரே தெய்வம்;
பயிலுமுயிர் வகைமட்டுமின்றி யிங்குப்
பார்க்கின்ற பொருளெல்லாம் தெய்வம் கண்டீர்!
வெயிலளிக்கும் இரவு, மதி, விண்மீன், மேகம்
மேலுமிங்குப் பலபலவாம் தோற்றங் கொண்டே
இயலுகின்ற ஜடப்பொருள்கள் அனைத்தும் தெய்வம்
எழுதுகோல் தெய்வம்; இந்த எழுத்தும் தெய்வம்!"

பாரதியாரின் இந்தப் பாட்டைப் பாடுபவர்கள்தான் திருப்பதி கோவிலுக்குத் தங்கத் தகடு போர்த்துகிறார்கள்! 'கோவில் சொத்தைத் தொடாதே!' எனக் கதறுகிறார்கள்!

உயிர்களெல்லாம் தெய்வமென்றால்—அந்த உயிர்களைக் காப்பாற்ற, ஏன் கோவில் சொத்துக்களைப் பயன்படுத்தக் கூடாது? நோயாளியையும், ஏழையையும் காப்பாற்று

[தொடர்ச்சி பக்கம் 8]



வெள்ளி 15—11—57 சென்னை

எச்சரிக்கை !

எல்லாத் துறைகளிலும் எதேச்சாதிகார வெறி பிடித்தலையும் டில்லிப் பேரரசு, முன்பு, உணவு ஏற்பாட்டின் பொருட்டு தென் மண்டலக் குழு நிறுவியபோது வழக்கப்படியே தன் விருப்பத்திற்கேற்ப, மைசூரை இணைக்காமல் விட்டது. எப்போதுமே தமிழகம் உணவுப் பற்றுக் குறைப் பிரதேசமாயிருந்து வந்துள்ளது என்பதற்கு வரலாற்று—இலக்கிய ஆதாரங்கள் ஏராளமாக இருக்கின்றன. இன்று அந்நிலை மேலும் பரிதாபகரமான அளவில் வளர்ந்துள்ளதே தவிர குறைவதற்கு எந்த நியாயமும் வழியும் இல்லை.

இவ்வாறிருக்க, தமிழகத்திலும் மிகமிக உணவுப் பற்றுக்குறைப் பிரதேசமான கேரள மாநிலத்தை இந்த தென் மண்டலக் குழுவோடு சேர்த்தது நியாயமற்ற சர்வாதிகாரப் போக்காகும் என்பது அன்றே எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

கேரள வணிகர்கள் தமிழகத்தில் பெருமளவு படையெடுத்து, பற்றுக்குறையினால் தம்மைப் போலவே தவித்துக் கொண்டிருக்கும் தமிழக மக்களைச் சுரண்டி, அதிக விலை கொடுத்து இங்குள்ள அரிசியை ஏராளமாகக் கொண்டு போகின்றனர். இந்த முறையினைத் தட்டிக் கேட்கவோ தடுக்கவோ அதிகாரமற்ற ஆட்சி இங்கே இருப்பதால் குறுவை அறுவடை ஆகியுள்ள இந்தப் பருவத்திலும், நியாயப்படி குறைந்திருக்க வேண்டிய அரிசி விலை வழக்கத்திற்கு மாறாகக் கூடிக் கொண்டே சென்றுள்ளது.

சகோதர நாட்டைத் திண்டாடவிட்டு—நம்மினத்தவராகிய தமிழர்களை வாடவிட்டு—கேரளத்தாராகிய நாமே அவர்களுக்குத் துரோகம் செய்யலாமா என்ற எண்ணம் கேரள வணிகப் பெருமக்களுக்கு உண்டாகும் என்று எதிர்பார்க்க முடியாது. அவ்வாறு கொள்முதல் செய்வது தவறு எனத் தடுக்கும் எண்ணமிருந்தாலும், உரிமையில்லாத நிலையில்தான் கேரளமும் மத்தியப் பேரரசினால் வைக்கப்பட்டுள்ளது.

தென்மண்டல உணவுக் குழு அமைப்பின்போதே கேரளத்தை மத்திய அரசின் நேர்தொடர்பில் வைத்துக் கொள்ளுமாறு கேட்கப்பட்டு, வாடிக்கைப்படி மறுக்கப்பட்டு விட்டது. இன்று எதிர் காலத்தில் ஒரே திராவிடக் கூட்டாட்சியின் கீழ் இணைய வேண்டிய நாம் ஒருவர்க்கொருவர் பகைத்துக் கொள்ளவேண்டும் என்ற தீய நோக்கத்துடனேயே மத்திய அரசினர்—அண்டை நாடுகளைச் சிண்டு முடிந்து விடும் வேலையில் இறங்கினர்.

பற்றுக் குறையினால் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள நிலைமை, வெளி மாகாணத்துக்கு, விளையும் அரிசியில் பெரும் பகுதியையும் ஏற்றுமதி செய்து விடுவதால் மேலும் மோசமாகிறது. "தன் வீட்டுக் கதவைப் பிடுங்கி இரவல் கொடுத்துவிட்டு, தான் விடியும்வரை காவல் காத்தானும்" என்றும், "தனக்கு மிஞ்சித்தானே தான தருமம்" என்றும் நமது பாட்டிமார்கள் பழமொழி கூறுவது இதனால்தான் போலும்.

இந்நிலையில் சாதாரண ஏழை மக்கள் ஓரளவு பயன் பெறுவதற்காகவும், தரங் கெட்ட தாயினும் ஏதோ தட்டின்றிக் கிடைக்கிறதே என்று திருப்தியடைவதற்காகவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நியாய விலைக் கடைகள், நமது மாநிலத்தையாளும் மகானுபாவர்களால் ஆயிரத்திலிருந்து ஐநூறாகக் குறைக்கப்பட்டு விட்டன. இந்த மேதா விலாசத் திட்டத்தின் பயனும், மேலும் நெருக்கடி ஏற்பட்டு மக்கள் திண்டாடுகின்றனர்கள்.

அரிசி, விளைவோ குறைவு; அதுவும் பெரும்பகுதி வெளி மாநிலங்களுக்கு வியாபாரக் கழுகுகளால் கொத்திச் செல்லப்படுகிறது; மிகுதியும் விலை ஏறிக்கொண்டே போகிறது; ஏழை மக்கள் வாங்கும் தரத்தில் கிடைப்பதற்கு ஏதுவாயிருந்த நியாய விலைக் கடைகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது என்றால்—வெந்த புண்ணிலே வேலைச் செருகிக் கொஞ்சம் அக்கினித் திராவகத்தையும் ஊற்றுவதுபோல் கோங்கோலாட்சி நடத்தும் கோமான்களைப்பற்றி என்ன சொல்வது?

இதே நேரத்தில், இங்கிருந்து அரிசி வாங்கிச் செல்லும் கேரள நாட்டிலோ ஆயிரக் கணக்கில் நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன என்ற செய்தியையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

எனவே, ஏற்கெனவே உணவுப் பற்றுக் குறையால் பாதிக்கப்பட்டு டெல்லிக் கடையின் முன்னால் நியாயம் கோரித் தவங் கிடக்கும் சென்னை மாநிலத்திற்கு மேலும் அநீதி இழைப்பதாகவே 'இந்தத் தென் மண்டல உணவுக் குழு ஏற்பாடு இருக்கிறது என்பதையும், இந்த விபரீதமான போக்கு விரும்பத்தக்கதல்ல, என்பதையும், இதற்கு உடனடியான பரிகாரமாவது இப்போதே செய்ய வேண்டும் என்பதையும், இருபுறமும் மாநில—மத்திய அரசுகளின் கிடுக்கித் தாக்குதலால் அவதியுறும் தமிழ் மக்களின் சார்பில் எடுத்துக் கூற விரும்புகிறோம்.

மேலும், உணவுக் கொள்கை இவ்வளவு மோசமாயிருக்கையில் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யும் உழவர் வாழ்வையாவது வளமுள்ளதாகச் செய்ய இந்த அரசினர் முன் வருகிறார்களா என்றால், அதுவுமில்லை. கண் துடைப்புக்காக, பண்ணையாள் பாது காப்புச் சட்டம் போன்ற ஓட்டை உடைசல் சட்டங்களை ஏற்படுத்தி, அதன் சந்து பொந்துகளில் ஒளிந்து கொண்டு சாணக்கிய தந்திரம் புரியும் சதிகாரர்களுக்குத்தான் பாதுகாப்புத் தருகிறார்கள். நிலப் பிரபுக்களின் கோட்டத்தை அடக்கி, சட்டத்திலுள்ள குறைபாடுகளைத் திருத்துமாறு எவ்வளவோ கூறியும் எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காகவே இருக்கிறது.

நடைபெற்றுவரும் சட்ட சபைக் கூட்டத் தொடரில், **14-11-'57** அன்று வாக்களித்தபடி விரைவில் அந்தத் திருத்தங்களைக் கொண்டு வருவார்களானால் வாடும் உழவர் வாழ்வில் மலர்ச்சி தோன்றி, அதன் காரணமாய் உற்பத்தி பெருகி, உணவு சம்பந்தமாய் ஓரளவாவது முன்னேற்றம் காண வாய்ப்பாகும் என்பதை எடுத்துக் கூறி, தேவையான செயலில் துணிவோடு இறங்குகின்ற பெருமனப்பான்மை ஆட்சியாளருக்கு அவசியம் வேண்டும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் கூற விரும்புகிறோம்.

தக்க வழிவகைகளை இந்தத் தருணத்தில் கையாளத் தவறினால் கொடியதொரு உணவுப் பஞ்சத்தையும் நெருக்கடியையும் சமாளிக்க வேண்டிய ஓர் அவல நிலை தமிழகத்துக்கு ஏற்பட்டே தீரும்; அதற்கான அறிகுறிகள்தான் மேலே கூறப்பட்டவை என்பதையும் கூறி எச்சரிக்கிறோம்!

பணமில்லை; பணமில்லை!

"இன்று நாங்கள் சொல்லுவதைத் தப்பு என்று மந்திரிகள் சட்ட சபையில் சொல்லவில்லை; நிறைவேற்ற முடியவில்லையே என்ன செய்வது—என்றுதான் கேட்கிறார்கள். ஆசிரியர்களின் சம்பளத்தை அதிகப்படுத்தச் சொன்னால், 'அதை நானும் ஒத்துக்கொள்கிறேன்; ஆனால், அதிகப் பணத்துக்கு வழியில்லையே' என்றுதான் அமைச்சர் சொல்கிறார்.

இந்தப் புத்தி, தேர்தல் காலத்தில் எங்கே போயிற்று? இதைத் தேர்தல் காலத்திலேயே நீங்கள் சொல்லியிருந்தீர்களானால் உங்களுக்கு இத்தனை 'ஓட்டுகள்' விழுந்திருக்குமா?

பணம் இல்லையே, அதற்கு என்ன வழி-என்று எங்களைக் கேட்கிறீர்களா? கேட்டால் சொல்லுவோம்—கேளுங்கள்; கொடுக்கப்படும்—தட்டுங்கள்; திறக்கப்படும்—என்று.

டி. வி. எஸ். கம்பெனிக்கு 600—700 பஸ்கள் ஓடுவதாகச் சொல்லுகிறார்கள்; நாள் ஒன்றுக்கு ரூ. 8,000 வரும்படி மானம் கிடைப்பதாகக் கேள்வி; நீ அங்கு கேள்—கொடுக்கப்படும்.

பட்டுப் புடவையை இடுப்பில் கட்டிக்கொண்டே, 'எங்கே என் பட்டுப் புடவை?' என்றால் என்ன அர்த்தம்?

நீ கேட்டால் கொடுப்பார்கள்; தேர்தல் காலத்தில் டாடா கம்பெனிக்காரன் இலட்சக் கணக்கான ரூபாய் கொடுத்தான். வாங்கிக் கொண்டாய்; கோர்ட்டில் நீயே ஒப்புக் கொண்டிருக்கிறாய்.

மனித உருவில் உலவும் கழுகுகள் தனக்குக் கிடைக்கும் இலாபத்திலிருந்து கொத்திக் கொடுக்கின்றன. அதை இலட்சக் கணக்கான ரூபாயை—கைநீட்டி வாங்கியிருக்கிறார்கள் இவர்கள், தேர்தல் காலத்தில்!

இப்படிக் கேட்டால், 'நாங்கள் ஏழைமக்களை மட்டும் காப்பாற்றமாட்டோம்; எங்களுக்கு ஏழையும்—பணக்காரனும் ஒன்றுதான்; அய்யரும்—திராவிடரும் ஒன்றுதான்; எல்லோருடைய தயவும் எங்களுக்குத் தேவை; சுருக்கமாகச் சொன்னால், ஓட்டராக உள்ள ஒவ்வொருவர் தயவும் தேவை'— என்கிறார்கள்."

—அறிஞர் அண்ணா

நேரு உயர்ந்தார் - ஆனால் கட்சி கரைந்தது!

“உங்கள் விருப்பப்படி ஏதேதோ செய்து கொண்டிருக்கிறீர்கள். கூடியிருக்கும் நாம், நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் முடிவுகளைச் செய்து கொண்டிருக்கிறோம். உங்கள மனம் எங்கெங்கு அலைந்து கொண்டிருந்தபோதிலும், உட்கார்ந்திருப்பதாவது தலைவரைப் பார்த்த வண்ணம உட்கார்ந்திருக்கக் கூடாதா?”

ஓரிடத்தில் குழுமியிருந்தவர்களைக் குறித்து அழாக் குறையாக ஒருவர் மேற்கண்ட கருத்தை வெளியிட்டுள்ளார். பஜனை மடத்தை, நள்ளிரவு வேளையில் பாராயணம் செய்பவர் படம் பிடித்துக் காட்டிய காட்சியா? அல்லது ஆலயத்தின் முன்னே கதா காலட்சேபத்தின்போது தூங்கி விழுபவர்களைப்பற்றி குறிப்பிட்ட கருத்தா? இந்த ஐயம் சிலருக்கு எழலாம். பஜனை மடமோ காலட்சேப அரங்கோ அல்ல இங்கே சித்தரிக்கப்பட்டுள்ள இடம். 1954-ல் நடந்த ஆஜ்மீர் காங்கிரசு செயற்குழுக் கூட்டம்--பேசிய பெம்மான் பண்டித நேரு. அகில இந்தியாவுக்கும் ஒரே கட்சி காங்கிரசு என்று பூரிப்போடும் புளகாங்கிதத்தோடும் பேசப்பட்ட காலமும் ஒன்றிருந்தது. அந்த மாபெருங் கட்சியின் செயற்குழுக் கூட்டம் பஜனை மடமாக காட்சி தருகிறது என்றால், வளர்ச்சி பெற்றிருந்த கட்சி எந்த அளவுக்கு, பெரியதொரு வீழ்ச்சியடைந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்தால் யாருமே வியப்பர்.

அப்போது பேசிய பண்டிதர் கீழ்க் கண்டவாறு பேசியுள்ளார்:

“அதிகாரிகளும் போலீசு படைகளும் புடைசூழ, மந்திரிகளாயிருக்கும் காங்கிரசுக்காரர்கள் வருவதைப் பார்க்கும் சாதாரண காங்கிரசுக்காரர்கள் மனதில் எரிச்சல் ஏற்படாமலிருக்காது. ஆதலால், இனிமேலாவது, இப்படி ஆடம்பரம் காட்டாமல் நடந்து கொள்ளவேண்டும்” என்று மேலும் போதனை புரிந்த பண்டிதர் தன் வேதனையை வெளிக்காட்டும்முறையில், “நாட்டில் என்னென்ன செய்திருக்கிறோம் என்பதைக் காங்கிரசுக்காரர்கள் கூடத் தெரிந்து கொள்ளாமல் இருக்கின்றனர். இது எவ்வளவு பெரிய வேதனையான விஷயம்! அவர்களுக்காவது தெரிந்திருக்க வேண்டாமா? அப்போது தானே மக்கள் மத்தியில் காங்கிரசு செய்த நன்மைகளை எடுத்துச் சொல்ல முடியும்!”

இந்த அளவுக்கு வருத்தத்தோடும், வாட்டத்தோடும், நாணித் தலை குனிந்தும், நம்பிக்கையற்ற நிலையிலும் அவர் பேசுவதற்குக் காரணம், அன்று ஆஜ்மீரில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் செயற்குழு அங்கத்தினர்கள் 220 பேர் மட்டுமே பங்கேற்றனர். அவர்களும் கொட்டாவிவிட்டுத் தூங்குவதற்காக வந்தவர்களாகக் காணப்பட்டார்களே யன்றி கொள்கைகள் பற்றி விவாதிக்க வந்தவர்களாகக் காணப்படவில்லை. அன்று கூடிய அங்கத்தினர்களும் மொத்த அங்கத்தினர்களுள் பாதிகூட இல்லையென்றால், அன்று கட்சியின் தலைவிராக இருந்த அலகபாத் பண்டிதர் கோபப்படாமலும் கவலைப்படாமலும் வேறென்ன செய்வார்?

ஏறத்தாழ 50,000 ரூபாய் செலவில் அலங்காரப் பந்தல் அமைத்து கொண்டாடப்பட்ட அந்தத் திருவிழாவில் “நாட்டில் நடக்கின்ற தொழில்களெல்லாம் இப்போது போலவே நடந்தால் போதும்” என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மத்திய அரசாங்க முன்னாள் அமைச்சரான திரு. என். வி. காட்கில் அவர்கள் “தொழில்களை தேசிய மயமாக்காமல் எத்தனை நாளைக்குத்தான் தள்ளிப் போட முடியும்? இப்பொழுது காங்கிரசுக் கட்சி முதலாளிகளின் முன்னோடும் பிள்ளையாக மாறிவிட்டது,” என்ற கருத்துப்பட தனி மனிதராக நின்று எதிர்ப்புக் குரல் கிளப்பினார். அந்த எதிர்ப்புக் குரல் பண்டிதரின் பொறுமையை சோதித்தது. வெகுண்டெழுந்த பண்டிதர் தன் விருப்பப்படி வழக்கம்போல சுடு சொற்களை, கடும் வார்த்தைகளை விசி, ‘முட்டாள் தனம்’ என்று முடிவுரையும் கூறினார். இது 1954-ல் காங்கிரசின் நிலை!

அடுத்த ஆண்டில் 1955-ல் ஆவடியில் கூடிய காங்கிரசுக் கட்சி, தான் இழந்து வரும் மதிப்பை திரும்பவும் பெற வேண்டும் என்று எண்ணியது. உயிர் போன உடலுக்கு புதிய ரத்தம் ஊட்டுகின்ற பணியிலே காங்கிரசுத் தலைவர்கள் ஈடுபட்டனர். சமுதாய அடிப்படையில் மாற்றம் காண வேண்டும் என்ற எண்ணமும், சமதர்மக் கொள்கையும் எங்கும் வேரூன்றி வருவது காங்கிரசுக்காரர்களின் கவனத்தைக் கவர்ந்தது. எனவே உடைந்து போன மண் குடத்துக்கு சமதர்மஒட்டுவேலைகள்நடத்தினர். சோசியலிசத்தை முன்னிறுத்தி தீர்மானமும் நிறைவேற்றினர். தீர்மானமும் முழு சோசியலிசத்தின் உருவில் அல்லாமல் மாதிரி சோசியலிசமாகவே நிறைவேறியது இங்கு நினைவு கூறத் தக்கது. இது குறித்து தேசிய ஏடான ‘சுதேசமித்திரன்’ தனது 17-2-1955 இதழில் ஒரு கேலிச் சித்திரம் தீட்டிக் காட்டியது. குளத்தில் நீராடிக் கொண்டிருந்த கோபிகையர்களின் சேலைகளைக் குழலூதி கண்ணன் திருடிச் சென்ற காட்சி அதில் சித்தரிக்கப்பட்டிருந்தது. கண்ணனாக பண்டிதரையும், கண்டாங்கி சேலைகளாக சோசியலிசத்தையும், கன்னியர் நிலையில் திரு. ஆசார்ய கிருபளானியையும் சித்தரித்து, அதன் கீழே “சோசியலிஸ்ட் இலட்சியத்தை காங்கிரசு ஏற்றுக் கொண்டது சோசியலிஸ்ட் கட்சிக்கு ஒரு அறைகூவல் என்று லோகியா சொன்னார்,” என ஒரு குறிப்பும் எழுதியிருந்தது. இந்தப் படம் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் கன்னியரின் சேலை கண்ணுக்கு எப்படி உரிமையற்றதோ; அதைப்போலவே சோசியலிஸ்ட் கட்சியின் சோசியலிச கொள்கை காங்கிரசுக்கு உரிமையற்றது என்று கூறுகிறது.

வலுவிழந்த காங்கிரசுக்கு வலுவூட்டும் முயற்சி பல துறைகளிலும் நடைபெறுகிறது. 1954-ல் அக்கறையற்றிருந்த காங்கிரசார்கள் 1955-ல் வீசப்பட்ட சோசியலிசம் என்ற சொக்குப் பொடியின் மூலம் சுறு சுறுப்பு பெற்றனர். சென்னையின் மேயராக பணியாற்றிய காங்கிரசுப் பிரமுகர் திரு டி. செங்கல்வராயன் எம். சி. அவர்கள் சென்னையில் 18-2-1952-ல் நடைபெற்ற காங்கிரசு ஊழியர் கூட்டமொன்றில் “காங்கிரசு ஊழியர்களுக்கு பொது மக்களிடம் பழக பயிற்சி உண்டாக்க வேண்டும். அதற்கான கல்லூரியைத் திறக்க தானே ஏற்பாடு செய்கிறேன்,” என்று கருத்துரை தந்துள்ளார்கள். பொது நலச் சேவை புரிவதாக முன்வந்துள்ள காங்கிரசுக்காரர்கள் பொது மக்கள் மத்தியில் பழகத் தெரியாதவர்கள் என்பது மட்டுமல்ல; பழகுவதற்குப் பள்ளியில் பயிற்சி தரவேண்டிய அளவுக்கு இழிந்த நிலையில் இருக்கின்றார்கள் என்பதும் புரிகிறது.

நாலணா கொடுத்தால் யாரும் காங்கிரசுக் கட்சியின் அங்கமாகிவிட முடிகிறது. ராஜா சர். முத்தையா செட்டியார், நெடும்பலம் சா. இராமலிங்கம் இவர்களெல்லாம் எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றனர். கதராடைகூட கட்டாயம் இல்லை என்று விட்டுக் கொடுத்தும் கட்சிக்கு பலம் சேர்க்க முயல்கின்றனர் காங்கிரசுக்காரர்கள். ஆனால் ஆசிய ஜோதியோ இந்த தேசியவாதிகளின் உள்ளத்துக்கு மாறாகவே உபதேசம் புரிந்து வருகிறார். அவருடைய இதோபதேசம் இவர்களுடைய இதயத்தைத் தொட்டதாகவே தெரியவில்லை. “காங்கிரசில் எவ்வளவு பேர் இருக்கின்றனர் என்ற எண்ணிக்கை பெரிதல்ல; தரம்தான் பிரதானம். முதல் தரமான மனிதர்கள் இருப்பதையே நான் விரும்புகிறேன். ஐக்கியத்தைச் சீர்குலைக்கும் ‘மந்தைகள்’ நமக்கு வேண்டாம்,” என்று முடிசூடா மன்னர் 28—12—53-ல் புதுடில்லியில், காங்கிரசுக் கட்சியில் மனிதர்களல்ல மந்தைகள் புகுந்து நிறைந்துவிட்ட காட்சியை கவலையோடு தெரிவித்துள்ளார்

மந்தைகளாக,’ அங்கேயிருந்த மனிதர்களும் மாறி வருகின்ற காரணத்தினால்தான் இன்று சந்தி சிரிக்கின்ற நிலைமை காந்தியார் வளர்த்த அக் கட்சிக்கு ஏற்பட்டிருக்கிறது.

வரவர காங்கிரசுக் கட்சி வாலிபர்களின் ஆதரவை இழந்து வருகிறது. இள இரத்தம் காங்கிரசுக் கட்சியினுள் புகுந்தில்லாமல் காங்கிரசுக்குப் புது வாழ்வு இல்லை என்ற எண்ணம் தலைவர்களின் நெஞ்சத்தைக் குடைகிறது. அதற்கான முயற்சியிலே காங்கிரசுக் கட்சி தன் முழு சக்தியையும் பயன்படுத்தி வருகிறது. 1954-ல் கல்யாணி காங்கிரசில் மாவட்ட காங்கிரசுத் தலைவர்கள் கூட்டத்தில் பண்டித நேரு இந்த பிரச்சினைக்குரிய பாலபாடத்தை துவக்கி வைத்துள்ளார்: “யுவர் யுவதிகளுக்கேற்ற கவர்ச்சிகரமான தான வேலைத் திட்டங்களுடன் அவர்களை அணுகுங்கள். அப்பொழுதுதான் அவர்களின் ஒத்துழைப்பை நாம் பெற முடியும். இல்லாவிடில் காங்கிரசு விரோதிகள் அவர்களைத் தங்கள் கட்சிக்கு இழுத்துக் கொள்வார்கள்.”

காளையரையும் கன்னியரையும் கட்சியிலே இழுப்பதற்காக கவர்ச்சிகரமான வேலைத் திட்டங்களை வகுத்து நிறைவேற்ற வேண்டுமென்ற பண்டிதரின் விழைவு, இன்று மாணவர்களுக்கு வலை வீசும் பணியிலே மாநில காங்கிரசுக்காரர்களையும் ஈடுபடுத்தியுள்ளது. அண்மையில் புது டில்லியில் கூடிய செயற்குழு கூட்டமும் “மாணவர்களின் செல்வாக்கை காங்கிரசு இழந்து வருகிறது” என்று வருத்தம் தெரிவித்து, ‘அதை மீண்டும் பெறுவதற்கு வேண்டிய வகைகளில் தொண்டு புரிய வேண்டுமெ’ன்று தீர்மானமும் நிறைவேற்றியது.

அதே நேரத்தில் இங்குள்ள காமராசர்களும், சுப்பிரமணியங்களும் மாணவர்கள் அரசியலில் ஈடுபடக் கூடாது என்று போதனை புரியத் தவறுவதில்லை.

ஏறத்தாழ இரண்டு வாரங்களுக்கு முன்பு சென்னை நுங்கம்பாக்கத்தில் மாணவர் காங்கிரசைத் துவக்கி வைத்த மாநில நிதியமைச்சர் திரு. சுப்பிரமணியம் ‘மாணவர்களுக்கு அரசியல் தேவையில்லை’ என்று தெரிவித்துள்ளார். சட்ட சபையிலும் இதையே வற்புறுத்திப் பேசிய நிதியமைச்சரின் ‘டில்லி எசமானர்கள் அனைவரும்’ இலட்சு

[தொடர்ச்சி பக்கம்...

விற்பனையாகிறது!
முத்தாரம்
நவம்பர் இதழ்!

சென்ற இதழில் ...

- இந்து தர்மத்தின் இரும்புக் கோட்டையான சோமநாதபுரத்து ஆலயத்தை முற்றுகையிட்டு, முறியடிக்கத் துவங்குகிறான் கஜினி முகம்மது. அந்தப் போர்ப் பாதையில் குறுக்கிட்டு, இஸ்லாம் மதத்தை இழித்தும் பழித்தும் பேசிய இந்து சாது ஒருவனது உயிரை சோமேசரே காப்பாற்ற முடியவில்லை—அவன் உடல் பல கூறாக, தலை காட்சிப் பொருளாகிறது!
- ஆண்டவனின் அருள்பெற்ற தங்களுக்கு வெற்றி நிச்சயம் என்று கருதிய சோமநாதபுரத்துவாசிகள் பக்திபோதை தலைக்கேறி ஆலயத்தில் கூடி நிற்கின்றனர்......

11

'புவனா எங்கே?' என்ற கேள்வி கஜினி முகம்மதுவின் உள்ளத்திலே மட்டும் எழவில்லை; வாசகர்களின் உள்ளத்திலேயும் எழுந்திருக்கும் என்றே நம்புகிறோம்.

புவனாவை சிதையிலிட்டு சனாதனப் புரோகிதர்களும், மதவெறி கொண்ட மக்களும் கொளுத்தினார்களல்லவா? அவர்கள் இட்ட தீயில் புவனா எரிந்து சாம்பலாயிருப்பாள் என்று எண்ணினால், புரோகிதர்கள் அந்தக் காலத்தில் நடத்திய பொல்லாத கொடுமைகளை நாம் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை என்பதுதான் பொருள். முதுகு கூனி, தோல் சுருங்கி, தள்ளாத பருவத்தை எட்டிப் பிடித்து விட்ட பாட்டியாக புவனா இருந்திருந்தால் உண்மையிலேயே அவள் கொளுத்தப்பட்டிருப்பாள். பருவம் ஆட்சி செய்யும் அந்த அழகு மலர் மேனியை தீயிட்டுக் கருக்க, தலைமைப் புரோகிதனும் அவனைச் சார்ந்தோரும் அப்படியென்ன ரசிக உணர்ச்சியே இல்லாதவர்களா? ஆகவேதான், தலைமைப் புரோகிதன் இளம் பெண்கள் உடன்கட்டை ஏறத் தனி மேடையொன்றை அமைத்திருந்தான். அது ஒரு விசித்திரமானமேடை! சிதையில் இளம் விதவை ஏறியவுடன் சிதைக்குத் தீ வைக்கப்படும். தீ எரிய ஆரம்பிக்கும் பொழுதே, புரோகிதர்கள் விசித்திரமானதொரு புகை மண்டலத்தை எழுப்புவார்கள். புகை மண்டலம் பெண்ணை மறைக்கும். முன் கூட்டியே உடன்கட்டை ஏறும் பெண்ணுக்கு அபின் சாரம் கொடுக்கப்பட்டு விடுவதால் அவள் சுய உணர்வற்று மேடையில் சாய்ந்து விடுவாள். உடனே மேடையின் கதவு திறக்கப்பட்டு அந்த மெல்லியல் உள்ளே இழுத்துக் கொள்ளப்படுவாள். ஆண்டவனை அடையப் பல மார்க்கங்கள் உண்டென்று தத்துவங்கள் கூறுகின்றன அல்லவா? சோமநாதரை அடைய — சோமநாதர் ஆலயத்திற்குச் செல்ல — ஏற்படுத்தப்பட்டுள்ள பல சுரங்க வழிகளில் இதுவும் ஒன்று.

தலைமைப் புரோகிதனின் குறிக்கு இலக்கான புவனாவும், இதே நிலையைத்தான் அடைந்தாள். சிதையில் ஏறி தீ மூட்டப்பட்டபின், சிந்தனையில் எந்த விதமான கவலையுமின்றி, ஆண்டவனின் பாதார விந்தங்களில் ...கணவனோடு சென்று மெய்மறந்து நின்றாள். தீ அவளைச் சுற்றிலும் கொழுந்துவிட்டு எரிய ஆரம்பிக்கும் பொழுது, மெதுவாக நினைவிழக்கத் தொடங்கினாள். அபின் சாரம் வேலைசெய்து கொண்டிருந்தது. நினைவு மறைய மறைய கடவுளின் சன்னிதானத்தை — தேவபூமியை—நோக்கிச் செல்லுவது போன்ற பிரமை அவளுக்கு ஏற்பட்டது. சிறிது நேரத்தில் மயங்கியே போனாள். அதற்குப் பின் என்ன நடந்தது என்பதே அவளுக்குத் தெரியாது!

* * *

புவனா கனவு கண்டு விழித்தவள்போல் கண் விழித்துப் பார்த்தாள். இடம் அவளுக்கு முற்றிலும் புதுமையாக இருந்தது. எங்கும் நிசப்தம் நிலவியிருந்தது. மக்கள் நடமாட்டமே இல்லை. பெரிய மண்டபம்; சுவர்களில் கலையழகோடு மிளிரும் சிற்பங்கள்; தரையில் இரத்தினக் கம்பளங்கள்; தூரத்தில் மேடையில் பழக் குலைகளும் பான வகைகளும்; அதோ, எண்ணற்ற இசைக் கருவிகள்! ஒருவேளை, இதுதான் சுவர்க்க லோகமோ! கற்புள்ள பெண்கள் — கணவனோடு உடன்கட்டை ஏறியவர்கள்—முடிவில் சென்றடையும் இன்பபூமி இதுவாகத்தான் இருக்க வேண்டும் என்று புவனா எண்ணினாள். கணவன் இறந்ததும், அவள் உடன்கட்டை ஏறியதும் அவளுக்கு வெறும் கனவுபோல் தோன்றின. கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டாள். குழந்தையின் நினைவு வந்தது. அவளுடைய நெஞ்சம் திடுக்கிட்டது. குழந்தையைப் பிரிந்து விட்டதை எண்ணியதும் எங்கோ 'நரக'த்தில் இருப்பது போல் உணர்ந்தாள். ஒரு முறை, தன்னைத்தானே கிள்ளி விட்டுக் கொண்டாள்...அவள் இறக்கவில்லை...உயிரோடுதான் இருக்கிறாள்! அப்படியானால் அவள் இப்பொழுது எங்கிருக்கிறாள்? அங்கு எப்படி வந்தாள்? அவளுக்கு ஒன்றுமே விளங்கவில்லை!

மெதுவாக எழுந்தாள். வாயில்கள் எதுவும் தென்படவில்லை. வெளிச்சம் மட்டும் மேற்புற சாளரங்களின் வழியாக மங்கலாக வந்து கொண்டிருந்தது. அவளுடைய உள்ளத்தில் ஒருவித திகில் குடிபுக ஆரம்பித்தது. சிறிது நேரம்வரை பயத்தால் அவளுடைய உடல் 'வெட வெட'வென்று ஆடியது. நாழியாக ஆக மெதுவாக அவளை அறியாமலே ஒரு அசட்டுத் தைரியம் தோன்றியது. மேடையின் மேல் ஏறி, எட்டிக் கொண்டு சாளரத்தின் வழியாக வெளியே பார்த்தாள். திடுக்கிட்டாள்! ஆம்; சொர்க்கத்தில் அவள் இல்லை — புரோகிதர்களால் பூலோக நரகமாக ஆக்கப்பட்டுவிட்ட சோமநாதபுரத்தில் தான் இருக்கிறாள்! அலைக் கரங்கள் நீட்டி ஆர்ப்பரிக்கும் கடல் உண்மையை அவளுக்குத் தெள்ளத் தெளியவைத்தது!

அவள் இருப்பது ஆலயம்—திடீரென்று பயங்கரமான அந்த உண்மை பளிச்சிட்டது. ஒருவேளை...? எத்தனையோ விபரீத எண்ணங்கள் பூகம்ப அதிர்ச்சி போல் அவளுடைய இதயத்தை உலுக்கின. திரும்பிப் பார்த்தாள். கீழேயிருந்த பழக் குலையும் பான வகைகளும் அவளைப் பார்த்துச் சிரித்தன. காலால் அவற்றை எட்டி உதைத்துத் தள்ளினாள். தங்கத் தாம்பாளம் ஒன்று உருண்டுபோய் வீணையின் கம்பிகளில் மோதி கானம் இசைத்தது.

"தேவகானம் பெண்ணே, தேவகானம்!" — எங்கிருந்தோ குரல் கேட்டது. ஏறிட்டுப் பார்த்தாள். மூப்பு ஆக்ரமித்து விட்ட மேனியைப் பீதாம்பரம் மூடி மறைக்க; உதட்டிலே வெற்றிப் புன்னகை நெளிய; நெறித்த புருவங்கள், உறுதியைக் காட்ட, தலைமைப் புரோகிதன் கம்பீரமாக நின்று கொண்டிருந்தான்.

"ஓட முடியாது செல்வீ! தெய்வ ப்ரீதியை நீண்ட நாட்களுக்குப் புறக்கணிக்க முடியாது பெண்ணே!"

"அயோக்ய சிகாமணியே, எது தெய்வ ப்ரீதி? அபலைப் பெண்களின் கற்பை ஆலயத்திலேயே சூறையாடுகிறாயே, அதுவா தெய்வ ப்ரீதி?"

புரோகிதன் கேலிச் சிரிப்பு சிரித்தான். "சாஸ்திரங்களை சரிவரப் படிக்காத சிறுமி நீ! கற்புக்கு சாஸ்திரோக்தமான இலட்சணம் தெரிய வேண்டுமானால் மனுஸ்மிருதியைப் படித்துப் பா...புவனேஸ்வரி. உன்னோடு தர்க்கம் செய்ய இது ஒன்றும் தர்க்க அரங்கமல்ல..."

"சண்டாளா.........!" என்று கத்திக் கொண்டே வெள்ளிச் செம்பு ஒன்றை எடுத்து அவன் மீது வீசினாள். புரோகிதனோ அவள் செயலை முன்கூட்டி அறிந்தவன்போல் வீசப்பட்ட செம்பைத் தடுத்து, கரங்களில் பிடித்துக் கொண்டு அவளைப் பார்த்து மீண்டும் சிரித்தான்.

"புவனேஸ்வரி, உன் ஆத்திரத்தைக் கண்டு நான் அறிவிழந்துவிட மாட்டேன். இதோ, அன்று என்னை முகத்தில் குத்திக் கீழே தள்ளி, உன்னை மீட்டுச் சென்றானே சாது ஒருவன்—அவன் ஏற்படுத்திய காயத்தின் வடு இன்னும் என் முகத்தில் மாறாமலேயே இருக்கிறது. இந்த வடுவைப் பார்க்கும் போதெல்லாம், நான் என் செயலுக்கு வருந்துவதில்லை. மாறாக, இந்த வடு, உன்மீது நான் கொண்டு விட்ட இச்சையை வளர்க்கவே உதவியாக இருந்தது...புவனா, இந்த மண்டபத்தில், ஆடி அழகு சேர்க்கும் மயில்களும், பண்பாடும் குயில்களும், மருண்ட பார்வையால் மையலூட்டும் மான் குட்டி

[தொடர்ச்சி பக்கம்-8]

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பையும் காலா காலத்தில் தந்திருக்கிறேன். விடுதலை வேட்கை கொண்ட மக்களின் எழுச்சியை அலட்சியப்படுத்தினுல் ஆபத்தை அணைத்துக் கொள்ள நேருமென்றும் அறைகூவல் விடுத்திருக்கிறேன் அமைதியும் சமாதானமும் கலந்த வகையிலேயே நாட்டுக்கு சுதந்திரத்தை அளித்து விட்டுப் போய்விடுங்கள்—அதுவே உங்களை உலகம் போற்றுவதற்குரிய சாலச் சிறந்த உபாயமாகுமென்றும் எடுத்துக் காட்டியிருக்கிறேன்.

"எங்கள் நாட்டில் பிறர் ஆட்சி கூடாது!

"எமது மண்ணில் எமது கொடியே பறக்க வேண்டும்!

"எமது கொற்றமே நிலவ வேண்டும்!

"எமது சட்டமே அமுலாக வேண்டும்!

"எமது வளத்தை யாரும் பறிக்க உரிமை கிடையாது—என்ற முழக்கத்தைக் கேட்டுக் கேட்டு இந்த மன்றத்தின் சுவர்களெல்லாம்கூட ஆட்டம் கொடுத்திருக்கின்றன. அறிவீர்கள் அதனையும்!

"ஆனுல் ஒன்று, அவையோர்களே! நான் உரிமை முழக்கமிடும் போதெல்லாம் என் பேச்சில் எள்ளளவு பலாத்காரவாடையையும் வீசக் கண்டிருக்க மாட்டீர்கள் நீங்கள்! ஆனுல் என் தலைமையில் நடைபெற்ற அறப்போரில் உங்கள் கொடிகள் கொளுத்தப்பட்டன—உங்கள் சட்டம் தீயிடப்பட்டது-உங்கள் மாளிகைகள் சிரழிக்கப்பட்டன—அதற்காக நான் மிகமிக வருந்துகிறேன். எனக்கும் அந்த நிகழ்ச்சிகளுக்கும் எந்த விதத் தொடர்புமே இல்லையென்று நான் கூறுவது தண்டனையிலேயிருந்து தப்பித்துக் கொள்வதற்காக அல்ல! அல்லது, உங்கள் கொடியையும் சட்டத்தையும் நான் புனிதமாகப் போற்றி அதன் கீழ் வாழ வேண்டுமென்று விரும்புகிறேன் என்ற பொருளையும் நீங்கள் யாரும் தவருகக் கொண்டு விடக் கூடாது!

"உங்கள் கொடியை மதிப்பேன்—அது உங்கள் நாட்டுக் கோட்டையிலே பறந்து, எங்கள் நாட்டுக் கொடியோடு உறவாடும்போது!

"உங்கள் சட்டத்திற்கு மரியாதை தருவேன்—அது உங்கள் நாட்டு மாமன்றத்திலே அனுஷ்டிக்கப்பட்டு எங்கள் நாட்டுக்குத் தனிச் சட்டம் அமைந்துவிட்டதை ஆமோதிக்கிற நேரத்திலே!

"இவை போன்ற மாறுதல்கள் ஏற்படாத வரையிலே உங்கள் கொடியும் சட்டமும் எனக்கும் என் நாட்டுக்கும் உகந்ததல்ல—அவை கொளுத்தப்பட்டதற்காக வருந்துகிறேன். ஆனுல் கொளுத்தப்படக் கூடாத உயர்ந்த பொருள்கள் அவை என்று நான் ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை!

"கொளுத்தியவர்கள்—வெறிச் செயல் நடத்தியவர்கள் எல்லாம் யார்? என் தலைமையில் இயங்கும் விடுதலைப் படையைச் சேர்ந்தவர்களா? அல்ல; அல்ல! ஆனுலும் அவர்கள் என் மரியாதைக்குரியவர்கள்! அவர்கள் தங்கள் உயிரையும் திரணமாக மதித்து நாட்டு விடுதலைக்காகத் தியாகத் தீயில் குதித்தவர்கள்!

"அவர்களில் சிலர் மாண்டு விட்டார்கள்! சிலர் அநியாயமாகத் தூக்கிலிடப்பட்டு விட்டார்கள்! சிலர் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டார்கள்! அந்த தீரர்களுக்கு நான் வீர வணக்கம் செலுத்தக் கடமைப்பட்டவன்! அவர்கள், விடுதலைப் போராட்டத்தை எதிர்பார்த்து ஏங்கிக் கிடந்தவர்கள். தாயகத்தின்மீது படிந்துள்ள அடிமைக் கறையை அகற்றுவதற்குத் துடியாய்த் துடித்தவர்கள். என்னைப் போலவே, என் விடுதலைப்படையினரைப் போலவே எமது தாயகத்தின் சுதந்திரத்திற்காகத் தவங் கிடந்த உத்தமர்கள்!

"அவர்கள் எல்லாம் யார்? என்னுடைய அறப்போரின் உச்ச கட்டத்திலே வெறி கொண்டு உம்மைத் தாக்கி—வெற்றியின் விளிம்பைத் தொடும் நேரத்தில் வீழ்ந்து போன வீரர்கள் எல்லாம் யார்?

"இந்த நாட்டு மண்ணுக்குரியவர்கள் மட்டுமல்ல; சொன்னுல் வெட்கம்—சொல்லா விட்டால் என் வாதத்திற்கு வலுவில்லாமற் போய் விடும்—இதோ இருக்கிருரே; மன்றத்துப் பெரியவர், முதுகிழவர், இவர் ஒரு காலத்தில் தயாரித்து வைத்த சேனையாகும் அது! என் அன்புக்கும் பாராட்டுதலுக்குமுரிய அந்த சேனைக்குப் பயிற்சி தந்து வளர்த்த பெருமை, இதுவரையில் என்னையும் என் கிளர்ச்சியையும் எதிர்த்து வாதிட்ட பெரியவரையே சாரும்!

"இந்த மன்றத்தில், நாடு விடுதலையாக வேண்டிய அவசியத்தை நான் எடுத்துரைத்த நேரங்களில் எல்லாம், இந்தப் பெரியவர் மன்றத்துக்கு வெளியே நின்று என்னை இழித்துரைத்து, "ஏடா மூடா! வாய்ப் பேச்சால், வரப் போகும் ஆபத்தை எடுத்துரைத்து விடுவதால் நாடு கிடைத்து விடுமோ? இதோ பார் என் திட்டத்தை—கொடியைப் பொசுக்குவேன்—கோட்டையைப் பொடி செய்வேன்!" என்றெல்லாம் திட்டங்கள் தீட்டியவர்.

"இந்த ஆட்சி பீடத்தின் அபூர்வ ராஜ தந்திரத்தாலும் மிரட்டல்களாலும், இப்போது அவர் உங்கள் பக்கம் சாய்ந்து விட்டார். அதோடு, விடுதலைப் போராட்டத்தின் புனிதத் தன்மையையும் இகழ்ந்துரைக்கும் பக்குவம் பெற்றுவிட்டார். விடுதலைப் போரில் ஈடுபட்டுள்ள என் போன்ற வீரர்களையும் காட்டிக் கொடுக்கும் அரிய காரியத்தை அட்டியின்றி செய்து முடிக்கவும் கற்றுவிட்டார்!

"அவர் தயாரித்த படை, என் தலைமைக்குப் பணிகிறதோ இல்லையோ — என் போராட்டத்தை ஊக்குவிக்க வேண்டுமென்ற ஆசையில், எனக்கு உறுதுணையாக ஓடிவந்து விட்டது! படை என் பக்கம்! படை தயாரித்தவரோ, பகைவர்களாகிய உங்கள் பக்கம்!

"இது நான் முன்பே எதிர்பார்த்ததுதான்! என்னை அழிக்க அவர் உங்கள் பக்கம் சேருவார் என எண்ணியதுண்டு; ஆனுல் மண்ணையே உங்களுக்கு நிரந்தர அடிமையாக்க அவர் நெஞ்சு எப்படித்தான் துணிந்ததோ — யானறியேன்!

"வஞ்சகர்களாகிய உங்களுக்கு வழக்கறிஞராக மாறி—விடுதலைப் போர் நடத்திய எனக்குத் தண்டனை தர வேண்டுமென்று மன்றத்தில் பிரார்த்திக்கும் அவரைக் காலமும், அவர் செய்த பழம் பெரும் பணிகளும் மன்னிக்குமாக!

"இதோ, நான் பயங்கரக் குற்றச் சாட்டுகளுக்கு இலக்காகி நிற்கிறேன். அடுத்த நாட்டுப் படைகள் உங்கள் உதவிக்கு வர சிறிது காலதாமதம் ஏற்பட்டிருந்தால், என் முன்னே நீங்கள் எல்லாம் குற்றவாளிகளாக நிற்பீர்கள்! அதை நான் மறுப்பதற்கில்லை! ஆனுல் ஒன்று; ஆட்சியையே மாற்ற வேண்டுமென்ற எண்ணம் எப்போது எங்களிடையே எழுந்ததோ; அப்போதே உங்கள் கொடி-கொற்றம் ஆகியவைகளை அலட்சியப்படுத்துகிற நிலையும்; ஒப்புக்காக அவைகளுக்கு அடங்கி நடக்கவேண்டிய நிர்ப்பந்தமும் மட்டுமே எங்களுக்கு ஏற்பட்டு விட்டது என்பதை நான் சொல்லாமலே நீங்கள் புரிந்து கொண்டிருக்க வேண்டும்.

"ஆட்சியை மாற்றுவோம்; எங்கள் நாட்டைப் பெறுவோம்-என்ற முழக்கம் கிளம்பிவிட்ட பிறகு; உங்கள் கொடியும், சட்டமும் எங்களுக்கு உயிரற்ற பிணங்களைப் போலத்தான்! பிணங்களைக் கொளுத்தித்தான் தீரவேண்டும். அதற்கான சூழ்நிலை அரும்பாத காரணத்தால், திராவகத்தில் பதம் செய்யப்பட்டு, அழுகாமல் கெடாமல் பாதுகாக்கப்பட்ட சவங்களாகக் கொலு வீற்றிருந்தன உங்கள் கொடியும் சட்டமும்! நீங்கள் அவ்வளவு பெருமை கொடுத்துப் பாதுகாத்தீர்கள் உங்கள் கொடியை! அது அகற்றப்பட வேண்டிய காலம் வந்து விட்டது; இன்று எங்கள் முயற்சியில் நாங்கள் தோற்றுவிடலாம்—நாளை, அல்லது மறுநாள் நிச்சயமாக இந்தக் கோட்டையில் எங்கள் நாட்டுக்கொடிதான் பறக்கும்—எங்களை அடிமைப்படுத்தும் கொடி நீண்ட நாள் பறக்க முடியாது!...இந்த உறுதி நிறைந்த நம்பிக்கையோடு, உங்கள் தீர்ப்பை எதிர்பார்த்து நிற்கிறேன்!"

—கூண்டிலே, விடுதலை வீரன் இவ்வாறு முழக்கமிட்டு நின்ருன்.

அவையினர், ஒரு முகமாகக் கூறினர், "இவனைத் தூக்கிவிடுக!" என்று!

அதற்குள் — மன்றத்திற்கு வெளியே போர் முரசு ஒலித்ததை அனைவரும் திகைப்போடு கேட்டனர்.

"விடுதலை! விடுதலை!" என்ற ஒலி வானைப் பிளந்தது!

"அடுத்த நாட்டுப்படை ஓட்டம் பிடித்தது—நாடே ஒன்றுகூடி விடுதலை முழக்கம் செய்கிறது!" என்ற செய்தியுடன் காவலன் உள்ளே நுழைந்து கீழே விழுந்து மாண்டான்.

முரசொலி வேகமாயிற்று!...

மன்றத்துக்குள் மக்கள் புகுந்தனர், மடை திறந்த வெள்ளம் போல்!......

விடுதலைத் தலைவன் காப்பாற்றப்பட்டான்!......

மன்றம், மக்களால் வளைக்கப்பட்டது!......

கோட்டையிலே புதிய கொடி ஏற்றப்பட்டது!......

புதிய சுதந்திர கீதம் இசைக்கப்பட்டது!......

கண் விழித்தேன்; காரிலேயிருப்பதை உணர்ந்தேன். சிதம்பரம் வட்டார சுற்றுப் பயணத்தை முடித்துவிட்டு எங்கள் கார் சென்னை நோக்கி வேகமாக வந்து கொண்டிருப்பதை உணர்ந்தேன். கனவு பலிக்கும் என்ற நம்பிக்கையோடு ஆகாயத்தை நோக்கினேன்...களங்கமற்ற வானில் ஒரு நட்சத்திரம் என்னைப் பார்த்து கண் சிமிட்டியது; அதுதான் நம்பிக்கை நட்சத்திரம் போலும்!

- சுருளிமலை -

★

முரசொலியில்

மு. க. எழுதும்

தொடர் கதை!

டிசம்பர் 13-ம் நாள்

இதழில்

துவங்குகிறது!



இலட்சிய நடிகரின் சொந்தப் படம்!

● அண்மையில், குறைந்த செலவில், குறுகிய காலத்தில், நிறைந்த திறமையுடன், கலையுலகிற்கு ஒரு "மணி மகுட"மாக எம். ஏ. வி. பிக்சர்ஸ் அளித்த 'முதலாளி'யின் மூலம் மேலும் ஒரு வெற்றிப் படியில் ஏறியுள்ள இலட்சிய நடிகரும் நமது நண்பருமான ராஜேந்திரன் அவர்கள் எஸ். எஸ். ஆர். பிக்சர்ஸ் என்ற பெயரால் ஒரு படமெடுக்கும் நிறுவனத்தை அமைத்துள்ளார். இதன் துவக்க விழா அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில், சென்னை பாரமவுண்ட் ஸ்டுடியோவில் 13—11—57 இரவு 10-மணிக்கு சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு இயக்க நண்பர்களும், கலையுலகப் பெருமக்களும் திரளாக வந்திருந்தனர். புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள், எஸ். எஸ். ஆர். பிக்சர்ஸ் துவக்கப் பட்டத்தின் நோக்கத்தை எடுத்துரைத்து, படத்தில் வரும் லாபம், நடிகர்களுக்குப் பிரித்துத் தரப்பட வேண்டுமென்ற பெரு நோக்கோடு இந்த நிறுவனத்தை ராஜேந்திரன் அமைத்திருக்கிறார் என்றும் குறிப்பிட்டார். அண்ணா அவர்கள் கேமராவை முடுக்கி வைத்து அரியதொரு உரையாற்றினார். முதல் படம் சமூகப் படமாக இருக்குமென்று தெரிகிறது. இதை, பல படங்களில் உதவி டைரக்டராயிருந்தவரும், டைரக்டர் ராமனாத்தின் மாணவரும், "முதலாளி" டைரக்டருமான நண்பர் சீனிவாசன் அவர்கள் டைரக்ட் செய்வாராம்.

வசனம் எழுதும் பொறுப்பை, "வணங்காமுடி", "தை பிறந்தால் வழி பிறக்கும்", "சுகம் எங்கே?" முதலிய படங்களின் வசனகர்த்தாவான நண்பர் ஏ. கே. வேலன் ஏற்றிருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. எஸ். எஸ். ஆர். பிக்சர்ஸ் வெற்றியுடன் விளங்குமாக— என்று தமிழகத்தாரோடு சேர்ந்து நாமும் வாழ்த்து கூறுகிறோம்.

○○○

கண்ணதாசனின்-"ஊமையன் கோட்டை"

● கவிஞர் கண்ணதாசன் தயாரிக்கும் "ஊமையன் கோட்டை" வெகு வேகமாக வளரத் தொடங்கி விட்டது என்ற நற்செய்தியைத் தமிழகத்திற்கு அளிக்கிறோம். புரட்சி நடிகரும், இலட்சிய நடிகரும் நடிக்கும் இந்தப் படத்திற்கான கதை வசனங்களை கவிஞர்-கண்ணதாசன் அவர்கள் அமைத்திருக்கிறார். மருது பாண்டியர்களையும் ஊமைத்துரை வாழ்க்கையின் பிற்பகுதியையும் இணைத்து வெளியிடப்படும் இந்த வீர வரலாற்றுக் காவியம் தமிழர்களுக்கு ஓர் உணர்ச்சிச் சித்திரமாக, விடுதலை வேட்கையை எழுப்பும் சுவடியாக அமையும் என்பதில் ஐயமில்லை. இதன் டைரக்டர் நண்பர் மஸ்தான்.

○○○

பூம்புகார்

● ஏ. வி. எம். ஸ்டுடியோவில் திரு. கிருஷ்ணன் பஞ்சு டைரக்ஷனில் உருவாக இருக்கும் 'பூம்புகார்' படத்திற்கான ஆரம்ப வேலைகள் முடிந்து விட்டன.

அடுத்த மாதம் படப்பிடிப்பு ஆரம்பமாகும். சிலப்பதிகாரத்தின் சிறப்பையும் எழிலையும் ஒருசேரத் திரட்டி, பழந் தமிழர் வரலாற்றைப் படம் பிடித்துக் காட்டும் திரை ஓவியமாக 'பூம்புகார்' அமையும். கதை, வசனம்: மு. கருணாநிதி. கோவலனாக சிவாஜி கணேசன் நடிக்கிறார்.

○○○

அரங்கண்ணல் எழுதும் "மகனே கேள்!"

● நண்பர் அரங்கண்ணல் அவர்கள் எழுதும் "மகனே, கேள்" என்ற கதையை நாவல் பிலிம்சார் படமாக்குகிறார்கள். விரைவில் வெளிவருவதற்கான தீவிர முயற்சியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்படத்தில் நட்சத்திர நடிகர்கள் இருக்க மாட்டார்கள் என்று கூறப்படுகிறது. அரங்கண்ணல் அவர்களின் தேன் ததும்பும் தமிழ் நடை கேட்கும் நல்வாய்ப்பை நாவல் பிலிம்சார் அளிப்பார்கள் என நம்புகிறோம்.

முரசொலி சந்தா விபரம்

உள் நாடு

ஆண்டு சந்தா	—	8—00
ஆறு மாதம்	—	4—50

வெளி நாடு

ஆண்டு சந்தா	—	9—00
ஆறு மாதம்	—	5—00

புதிய சட்டம் பற்றி அறிஞர் அண்ணா!

(1) புதிய சட்டம், தேவையற்றது—தீமை பயப்பது—கொடுங்கோன்மைக்கு வழி கோலுவது.

(2) காங்கிரஸ் கட்சி புதிய அடக்குமுறைக் கருவியைக் கூர் தீட்டிக் கொள்ளுகிறது.

(3) மெஜாரிடி பலத்தைக்கொண்டு நிறைவேற்றப்படும் இந்தச் சட்டம், காங்கிரசின் பலவீனத்தையே காட்டும்.

(4) சட்டம் போட்டு கொடியை, அரசியல் சட்டத்தை, காந்தியார் படத்தைப் பாதுகாக்க முனைவது கண்டு உலகம் எள்ளி நகையாடும்.

(5) சட்டம் இயற்றுவது விரும்பத்தகாத செயல்களைச் செய்யவே தூண்டும்.

(6) இப்பொழுது தேவை சட்டமல்ல—சந்திப்பு; காமராஜ்—பெரியார் சந்திப்பு

—என்பதாக எடுத்துக் காட்டிப் பேசினார்.

●●●

"மூன்று ஆண்டு கடும் தண்டனை என்று மிரட்டுவதில் பயனில்லை. தன் மனதிற்குச் சரி என்று பட்ட கொள்கையின்படி நடந்துகொள்ளும்போது, சட்டம் குறுக்கிட்டால், தண்டனைகளைத் துச்சமென்று எண்ணி சிறை செல்லக்கூடியவர்கள், தமிழகத்தில் இலட்சக் கணக்கில் உள்ளனர்"

—என்பதை எடுத்துரைத்தார்.

●●●

"இயற்கைப் பாசத்தைக்கூட மறந்துவிட்டு, உங்களுக்காக இரவு பகலென்று பாராமல் தேர்தல் காலத்திலே உழைத்தார்; தன் செல்லப்பிள்ளை காமராசர் ஆட்சியில், தம்மால் எம். எல். ஏ.க்கள் ஆக்கப்பட்டவர்களின் ஆட்சியிலே, தமது சாதி ஒழிப்புத் திட்டத்துக்கு ஆதரவு கிடைக்கும் என்று நம்பினார்; நம்பினவரை நீங்கள் நட்டாற்றில் விடுகிறீர்கள்"

—என்று காங்கிரஸ் அமைச்சர்களையும் காங்கிரஸ் எம். எல். ஏ.க்களையும் இடித்துரைத்தார்."

●●●

"உங்கள் யூகம் மங்கிவிட்டது.

"நீங்கள் இராஜதந்திரத்தைக் காட்டத் தவறுகிறீர்கள்.

"நிலைமையை மோசமாக்குகிறீர்கள்"

—என்று, ஆட்சியாளர்களை எச்சரிக்கை விடுத்தார்.

●●●

"முதலமைச்சராவதற்கு முன்பு சாதி ஒழிப்பு மாநாட்டிலே கலந்து பேசிய காமராசர், அதிகாரத்துக்கு வந்தால் தமது முதல் வேலை சாதி ஒழிப்பாகத்தான் இருக்குமென்று பேசிய உறுதிமொழி இன்று எங்கே போயிற்று?"

—என்று கேட்டார்.

●●●

பிரச்சினைகளை சமாளிக்க முடியாமல் 'ஓடிவிடுகிறார்கள்' தி. மு. கழகத்தார் என்று நிதி அமைச்சர் பேசியதைக் குறிப்பிட்டு,

"எங்கள் விஷயமாக இவ்வளவு பேசும் அமைச்சர், இன்று பெரியார் குறித்த நெஞ்சு நெகிழத்தக்க பிரச்சினை விவாதிக்கப்படும்போது காமராசர் எங்கே? ஓடிவிட்டார் என்று சொல்லமாட்டேன்; அது அரசியல் நாகரிகமல்ல; ஒளிந்துகொண்டாரா?

—என்று கேட்டார்.

●●●

"பெரியாரைச் சந்தித்துப் பேசச் செல்லட்டும் என்று பக்தவத்சலனார் கூறியதற்குப் பதிலளிக்கையில்,

"நான் சென்று சந்திக்கிறேன்; ஆனால் அதுவரையில் மசோதாவைச் சட்டமாக்காமல் நிறுத்திவைக்க நீங்கள் தயாரா?" —என்று கேட்டார்.

●●●

தேசியத் தலைவர் படங்களையும், மத ஏடுகளையும் கொளுத்துவது உலகிலே எந்த நாட்டிலேயும் நடைபெற்றதில்லை என்று பேசிய கம்யூனிஸ்டுகளுக்குப் பதில் கூறுகையில்,

"துரதிருஷ்டவசமாக இந்தக் கம்யூனிஸ்டு நண்பர்கள் ரஷ்யாவில் இல்லை; இருந்திருந்தால் ஸ்டாலின் சிலைகளை உடைக்கவேண்டுமென்று கூறி குருஷேவ் சுரத்தைப் பிடித்து இழுத்து நிறுத்தி இருப்பார்கள் போலிருக்கிறது.

"புனித பைபிளையே, மார்ட்டின் லூதர் கொளுத்தித் தம் கண்டனத்தைத் தெரிவித்ததை, வேறு காரியங்களுக்காக அடிக்கடி ஐரோப்பா சென்றுவரும் கம்யூனிஸ்டுத் தலைவர், ஓய்வு நேரத்திலாவது தெரிந்துகொண்டு வரக்கூடாதா?"

—என்று கேட்டார்.

பண்டிதர் கண்ட ...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

...லே கடவுளுக்கு அன்பு செலுத்துதல் என்றால்—அத்தகைய நல்ல செயல்களுக்கு ஏன் கடவுளின் உள்ள சொத்துக்களைப் பயன்படுத்தக் கூடாது? கோவில்களைக் கல்வி நிலையமாக்க ஏன் சட்டம் கொண்டு வரக் கூடாது? மாணவர்களிடம் போய் "காந்தியின் வழியிலே நட!" என்று உபதேசிக்கிறாயே; உன்னால் நியமிக்கப்பட்ட கவர்னர்கள் காந்தி வழியிலே நடக்கிறார்களா? மந்திரிகள் அதன்படி நடக்கிறார்களா? "அஹிம்சை! அமைதி! அமைதி!" என உலகுக்கெல்லாம் உபதேசித்துவிட்டு முதுகுளத்தூர் மறவர்களை மிருகங்களைக் கொல்வதுபோல் சுட்டுக் கொள்வதுதான் அகிம்சையா?

நேரு: பாபுஜி!......நீங்கள்கூட அந்தப் பித்தர்களாகிய தமிழர்களுக்குப் பரிந்து கொண்டு பேசுகிறீர்களா?...

காந்தி:...என்ன கூறுகிறாய்?... "நான்கூட"—என்று நீ கூறுவதிலே ஒரு பொருளும் இல்லையே! தென்னாப்பிரிக்காவிலே தன் உயிரையே கொடுத்து என் உயிரைக் காப்பாற்றியது தமிழ் இனம்! ஆனால் மூன்று குண்டுகளால் என்னைக் கொன்றது உன் இனமாகிய பிராமண இனம்!

நேரு: நீங்கள் கூறுவதைப் பார்த்தால்........"திராவிடர்க்கென தனிக் கொடி ஒன்றை தந்து மகிழடா!" என்றும், "தமிழ் நாட்டிலே தமிழராட்சியைத் தழைத்திடச் செய்யடா!" என்றுகூட உபதேசிப்பீர்கள் போலிருக்கிறதே!

காந்தி: ஆமாம்; அதில் சந்தேகமென்ன?...அது சரி; நீ பிறந்த இந்தப் பொன்னான நாளிலே நீ எழுதிய சில பொன்மொழிகளை உனக்கு நினைவு படுத்த விரும்புகிறேன்! "திராவிட நாடு" என்றவுடன் "பேயோ, பூதமோ!" என நடு நடுங்கும் நீ, நீ எழுதிய கருத்துக்களையே படித்துப் பார்! உன்னால் "கண்டு பிடிக்கப்பட்ட இந்தியாவை" நீயே உற்றுப் பார்!

'வாகை மாலைசூடிய (சக்தி வாய்ந்த)' திராவிடர்கள், புழைய நாகரிக அடிப்படையைப் பெற்றிருந்தார்கள். ஆனால் ஆரியர்கள் தங்களை உயர்ந்தவர்களெனக் கருதினார்களோ என்னவோ இவர்களிடையே 'நீண்ட பிளவு' இருவரையும் பிரித்தது!"

"ஜாடகக் கதைகள், இந்தியாவின் மிக முக்கியமான இரண்டு மக்களினங்கள்—ஆரியர்; திராவிடர்கள் ஒன்று சேர்ந்த காலத்தவை!"

"பழந் தமிழ்ப் பாடல்கள், காவிரி ஆற்றங் கரையிலேயிருந்த காவிரிப் பட்டணத்தைப் பற்றி கூறுகிறது. அன்று அதுதான் உலகத்தின் தலையாய வியாபார மையமாக விளங்கியது!...யவனவர்கள் (கிரேக்கர்கள்) கொண்டு வந்த மதுவைப்பற்றி பழைய தமிழ்ப் பாடல் கூறுகிறது!"

நேரு.........! இப்படியெல்லாம் அன்று எழுதினாய்! இன்று, "திராவிடநாடு கேட்பது முட்டாள்தனம்! காட்டுமிராண்டித்தனம்!" என்றெல்லாம் கூறி திராவிடர்களின் இரத்தத்தைக் கொதிக்க வைக்கிறாய்!

நேரு: உங்களைக் கொன்றவன் 'ஆரியன்' என்பதற்காக, தாங்கள் திராவிடர்களுக்குப் பரிந்துகொண்டு பேசுகிறீர்கள் போலும்!

காந்தி: இல்லை; இல்லை!...நீயா என்னைப்பற்றி அப்படிக் கூறுகிறாய்?......தென்னகத்து மக்கள் பட்ட துயரம் போதும்! போதும்!...அவர்கள் பொறுமையின் எல்லையிலே துடிதுடித்துக் கொண்டிருக்கிறார்கள்! அவர்கள் உள்ளம் எரிமலையாகி விட்டது!...எரிமலை குமுறிக் கொண்டிருக்கிறது! என்னையே நம்பி யிருக்கிறார்கள்! நம்பிக்கைத் துரோகம் செய்யாதே! அவர்களை அடிமைப்படுத்தி அவர்கள்மீது இந்தியைத் திணிப்பதும் நீதியல்ல; நேர்மையல்ல! தென்னகத்தார் அடிமைப்பட்டு அல்லலுறும்போது, உனக்குப் பிறந்தநாள் விழாவிற்கு இவ்வளவு விமரிசை ஏன்?

["ஐயோ! பாபூஜி! போதும்! போதும்!... நிறுத்துங்கள்!" என்று கதறிக் கொண்டே நேரு கண் விழித்துப் பார்க்கிறார்! சுவற்றிலே தொங்கிக் கொண்டிருந்த காந்தியார் படம் கீழே விழுந்து சுக்கு நூறாக உடைந்து கிடந்தது! அதன்பொருள்...? "காந்தீயம் இந்தியாவிலே அழிந்துவிட்டது!" என்பதுதான்!]

—"இன்பபுரியான்"

அவர்களும் நாமும்

"காங்கிரஸ் கட்சிக்காரர்களுக்கு மக்களைப் பார்த்தால் 'ஓட்டர்' என்ற நினைவுதான் முதலில் வரும்; எங்களுக்கு, 'மனிதர்' என்ற நினைப்பு முதலிலும், பிறகு 'ஓட்டர்' என்ற நினைவும் வரும்.

"உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால், கோவில் திருவிழாவிலே இனிப்புப் பண்டம் விற்பவன்—அவன் உண்மையான பக்தனாக இருந்தாலும்கூட—சாமியையோ, கருடவாகனத்தையோ கவனிக்க மாட்டான்; தாய்மார்கள், தங்கள் இடுப்பில் எத்தனை குழந்தைகளை வைத்திருக்கிறார்கள் என்பதைத்தான் கணக்கிடுவான்.

"அதைப்போல, காங்கிரஸ்காரர்களும், மக்களைவிட; ஓட்டுகளைத்தான் முக்கியமாகக் கவனிப்பார்கள்.

"இந்தப் பக்கத்தில் எத்தனை ஓட்டு வரும்?— '50 ஓட்டு வரும்'— ஆகா! வருமா? இல்லை; 'இருபதுதான் வரும்'—உடனே வாயை, மூடிக் கொண்டு வாட்டத்துடன் திரும்புவார்கள்.

மனிதனை மனிதன் என்று கருதினால், அவர்களை கூலிகளாகவே இன்னும் விட்டு வைத்திருப்பார்களா?"

—அறிஞர் அண்ணா

சோமநாதபுரத்துச் சிலை ...

[5—ம் பக்கத் தொடர்ச்சி]

களும் நிறைய இருக்கின்றன. தலைமைப் புரோகிதனின் புன்னகை கிடைத்து விட்டால் போதும்; புளகாங்கிதம் அடைந்து அவன் இட்டபடி ஏவல் செய்ய எத்தனையோ ரதியைப் பழிக்கும் அழகிகள் இங்கே காத்துக் கிடக்கிறார்கள்! ஆனால்...என் மனம் என்னவோ ......மன விகாரங்கள் விசித்திரமானவை! கிட்டிய கனிகளை எட்டிக் காய் என எண்ணுவதும், எட்டாத கொம்பிலிருப்பவைகளைப் பார்த்து ஏங்குவதும்...! புவனேஸ்வரி! தப்ப முடியாத சமயத்தில் தஞ்சம் புகுவதுதான் விவேகம்!"

"ஸ்வாமி, நான் இப்பொழுது கைம்பெண்! தாங்களோ, பிரக்யாதி பெற்ற ஆலயத்தின் தலைமைப் புரோகிதர்...உங்களிடம் கைதியாகிவிட்ட அபலையிடம் கருணை காட்டுங்கள் ஸ்வாமி!"

"யார், யாருக்குக் கருணை காட்டுவது புவனா? சாம உபாயத்தில் ஆரம்பித்து தண்ட உபாயத்திற்கு கடைசியாகச் செல்லுவதுதான் லோகவழக்கு ...ஆனால், நீயோ; தண்ட உபாயம் பலனளிக்காத நிலையில் சாமத்திற்கு வந்திருக்கிறாய்...... புவனா, பசிக்காரனிடம் பழக் குலையை வைத்துவிட்டு, தர்ம உபதேசம் செய்வதில் பலனில்லை!"

வெறிபிடித்த மிருகத்திடமிருந்து தப்ப ஏதாவது வழியிருக்கிறதா என்று சுற்றும் முற்றும் பார்த்தாள் புவனா.

"ஓடமுடியாது புவனா! இது கற்கோட்டை! பிரதம புரோகிதனின் ஏகபோக ஆட்சிக்கு உட்பட்ட பூமி இது! ஆண்டவனே இங்கே அனுமதி கேட்டுக் கொண்டுதான் நுழைய வேண்டும்...ஆனால், ஒன்று மட்டும் உறுதியாகத் தெரிந்துகொள்... கனிய வைக்காமல் காயைப் புசிக்க வேண்டிய அவசியத்தில் இப்பொழுது நான் இல்லை. இந்த மண்டபத்துள் வந்த பிறகு இதுவரையில் எந்தக் காயும் கனியாமல் இருந்ததில்லை..."

புரோகிதன் இப்படிப் பேசிக் கொண்டிருக்கும் பொழுதே 'படபட' வென்று கதவு தட்டப்பட்டது. அப்பொழுதுதான் மண்டபத்துள் நுழைய கதவொன்று இருப்பதை புவனா உணர்ந்தாள்.

"யாரது...?" என்றான் புரோகிதன்.

"கதவைத் திறவுங்கள்... அவசரமான சேதி," என்றது குரல்.

புரோகிதன் கதவைத் திறந்தான். பெண்ணொருத்தி உள்ளே நுழைந்தாள்.

"என்ன விசேஷம்...?" என்றான் புரோகிதன்.

"ஸ்வாமி, சர்வநாசம்! கஜினி முகம்மது கோட்டைக்குள் நுழைந்துவிட்டானாம்... நமது படைகள் தோற்றோட ஆரம்பித்து விட்டனவாம்...கோபுரத்திலிருந்து பார்த்தால் முகம்மதிய வீரர்கள் கோட்டைக்குள் நுழைவது தெரிகிறது..." என்றாள் வந்தவள்.

புரோகிதனின் முகம் பிரேதக்களை அடைந்தது!

"சரி, இந்தப் பெண்ணை ஜாக்ரதையாகப் பார்த்துக்கொள்... நான் சீக்கிரமே வந்து விடுகிறேன்," என்று கூறிவிட்டுப் புரோகிதன் வேகமாக வெளி வந்தவள், புரோகிதன் போன பின் கதவைச் சாத்திவிட்டுப் புவனாவைக் கூர்ந்து நோக்கினாள்.

புரோகிதன் வர்ணித்தானே, அந்தப் பெண்களில் இவளும் ஒருத்தி போலிருக்கிறது என எண்ணிய புவனா சந்தேகத்தோடு அவளைப் பார்த்தாள்.

"நீ ஏன் நிற்கிறாய்? கதவைப் பூட்டிக்கொண்டு என்னைத் தனிமையில் விட்டுவிட்டு நீயும் போய்த் தொலை!" என்று கத்தினாள் புவனா.

புவனாவின் சீற்றத்தைக் கண்டு, வந்தவள் கோபிக்கவில்லை. அமைதியாக, அன்பொழுக புவனாவையே பார்த்துக் கொண்டு நின்றாள். பின் தணிந்த குரலில், "நீ நினைக்கிறபடி நான் கெட்டவளல்ல," என்றாள்.

புவனா, சந்தேகம் தெளிவடையாமலேயே அவளைப் பார்த்தாள். அநீதியின் இருப்பிடத்தில், அன்புள்ளம் இருக்க முடியுமா என்ற ஐயம் புவனாவுக்குத் தோன்றியது. அந்தப் பெண்ணே புவனாவின் உள்ளத்தை அப்படியே கண்டுபிடித்தவள்போல், "நீ எண்ணுவதிலும் தவறென்றுமில்லை ...கள்ளிக் காட்டில் முல்லைக் கொடி படர வழியில்லைதான்... ஆனால், புகையின் நடுவே தீயிருப்பதைப்போல, தீமையின் நடுவே நன்மை வாழத்தான் செய்கிறது," என்றாள்.

அதர்மத்தின் மத்தியில் கேட்கும் இந்த தர்மக் குரலைக் கேட்ட பொழுது புவனாவுக்கு நம்பிக்கையொலி பிறந்தது.

"நீ பேசுவதெல்லாம் உண்மைதானா?" என்றாள்.

"என்னை நீ மனப் பூர்வமாக நம்பலாம்; இங்கே நடக்கும் எத்தனையோ பாபச் செயல்களுக்கு—என் விருப்பத்திற்கு மாறாக நான் உடந்தையாக இருந்திருக்கிறேன்......ஆனால், என் பாபங்களுக்குக் கழுவாய் தேட, என் உயிரையும் பொருட்படுத்தாமல் யாருக்காவது ஏதாவது நன்மை செய்ய வாய்ப்பு கிட்டாதா என்று ஏங்கித் தவிக்கிறேன். இங்கிருப்பதாலேயே என்னைத் தவறாகக் கருதிவிடாதே! உனக்கு என்னாலான உதவியைச் செய்யவே வந்திருக்கிறேன்!"

புவனா நம்பிக்கையோடு அவளை நெருங்கினாள். "ஒரு பெண்ணின் வேதனையை இன்னொரு பெண்தான் பூரணமாக உணரமுடியும்," என்றாள் புவனா. பிறகு, "என் கதை உனக்குத் தெரியுமா?" என்றாள் சோகத்தோடு.

"ஒருவாறு தெரியும்...இந்தக் கதிக்கு ஆளாகும் முதல் பெண்ணல்ல நீ...இந்த சிற்பங்கள் மட்டும் உயிர் பெற்றுப் பேசுமானால் எவ்வளவோ சோகக் கதைகள் சொல்லும்," என்றாள் அந்தப் பெண்.

"சகோதரி, முதலில் உன்னைத் தவறாக எண்ணியதற்காக என்னை மன்னித்துக்கொள்...," -புவனா கண்ணீருடன் பேசினாள். மீண்டும், "இவ்வளவு அன்பு காட்டும் நீ யாரென்று சொல்லவில்லையே...உனக்கு ஆட்சேபணையில்லையானால், உன் பெயரை நான் அறியலாமா?" என்றாள்.

"நான் இந்தக் கோவிலுக்குச் சொந்தமான தேவதாசி! என் பெயர் திலோத்தமா!" என்றாள் அவள்.

பெட்ரோல் இல்லாத மோட்டார் - பணமில்லாத திட்டம்!



எதிர்பார்த்த வெளிநாட்டு உதவி கிடைக்காததால், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் சரிவர நிறைவேற்றப் படாதாம்—அந்த விசித்திரத்தை இந்தச் சித்திரம் விளக்குகிறது. ('சங்கர்ஸ் வீக்லி').

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

மணபுரியில் கூடிய இளைஞர் காங்கிரசு மாநாட்டுக்கு வழக்கத்துக்கு மாறாக வருகை தந்து இளைஞர்கள் காங்கிரசுக் கட்சியில் இடம்பெற வேண்டிய அவசியத்தை எடுத்துக் கூறியுள்ளார்கள். காங்கிரசின் தலைமைப் பீடம், 500 முழு நேரத் தொண்டர்களை சம்பளத்துக்கு ஏற்பாடு செய்து காங்கிரசின் அமைப்பு வேலைகளுக்குப் பயன்படுத்தப் போவதாக செய்தி ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு காங்கிரசு செயற்குழு அக்டோபர் 27-ம் நாள் காலை சென்னையில் கட்சித் தலைவர் திரு. கே. ராசாராம் நாயுடு அவர்கள் தலைமையில் கூடி நடந்து மறந்தவைகளையும், இனிமேல் நடக்க இருப்பவைகளையும் அலசி ஆராய்ந்துள்ளது. அப்பொழுது சொற்பொழிவாற்றிய திரு. காமராசர் காங்கிரசுக் கட்சியின் 1957-ம் ஆண்டு நிலையை படம்பிடித்துக் காட்டியுள்ளார்:

"நமது கட்சியிலுள்ள பலகீனத்தையும் குறைபாடுகளையும் காங்கிரசுக்காரர்கள் உணர வேண்டும். அவர்கள் தவறான கருத்தைத் தொடர்ந்து கொண்டிருப்பதில் அர்த்தமே இல்லை. இப்பொழுது தேர்தல் சமயத்தில் மட்டும் காங்கிரசுக்காரர்கள் செயலில் ஈடுபடுகிறார்கள். தேர்தல் முடிந்தவுடன் காங்கிரசுக்காரர்களும், காங்கிரசுக் கமிட்டிகளும், செயலற்றுப்போய் முடங்கி விடுகின்றன. இது வழக்கமான பழக்கமாகப் போய்விட்டது."

ஆனாலும் காங்கிரசுக் கட்சி சென்ற தேர்தலில் பெற்ற வெற்றி கட்சி பலத்தாலோ, கடமையுள்ளத்தாலோ, கொள்கை வலுவாலோ, குறையாத தொண்டாலோ பெற்றதல்ல என்பது தெளிவாகிறது. முதலாளிகளின் மோகனப் பார்வையும், மிட்டாதார்களின் அரவணைப்பும், பெரியாரின் பெருந்துணையும், இரும்புப் பெட்டிகளின் பக்க பலமும், இன்னும் சொன்னால் சாதி சமய வேறுபாடுகளின் சாசுவதமான நிலையும் காங்கிரசுக் கட்சிக்கு தமிழ்நாட்டில் ஒரு போலி வெற்றியைத் தேடித் தந்தது.

"அநேக காங்கிரஸ் கமிட்டிகள் தங்களுக்கென காரியாலயம் கூட வைத்துக் கொள்ளவில்லை. இம்மாதிரியான சாதாரண காரியங்களுக்காகக்கூட தமிழ்நாடு கமிட்டியிடமிருந்து நிதி உதவியை அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். இம்மாதிரிப் போக்கை அவர்கள் விட்டுவிட வேண்டும் ...கமிட்டிகள் நல்ல முறையில் செயல்படுமானால் போதுமான நிதி வசதிகள் கிடைப்பதும் சாத்தியமே!"—இதுவும் அவர் பேச்சின் நடுப் பகுதியே யாகும். காங்கிரசு செயற் குழுக்குள் தங்களுக்கென பணி மனைகள் கூட வைத்துக் கொள்ளவில்லை என்று கவலைப்படுகிறார் காமராசர். ஆனால் பணி மனைகள் வைத்துக் கொண்ட காங்கிரசு செயற் குழுக்களின் நிலை சொல்லுந் தரத்திலில்லை. காமராசர் அவர்கள் சென்னையில் இந்த அரிய கருத்துக்களை யெல்லாம் வெளியிட்ட அதே நாளில் திருவல்லா காங்கிரசு அலுவலகம் வரி கொடுக்காத காரணத்தால் நீதிமன்றத் தீர்ப்புப்படி ஏலம் செய்யப்பட்டுள்ள செய்தியும் வெளிவந்தது. "காங்கிரசு கமிட்டி நல்ல முறையில் செயல்படுமானால் நிதி திரட்டுவது சாத்தியமே" என்று குறிப்பிடுகின்றார். ஆனால் அந்த 'நல்ல முறை' எது என்பதை மட்டும் விளக்கிக் கூறவில்லை. அந்த விளக்கம் தரப்படாத பகுதிக்கு தேர்தல் நேரத்திலேயே அகில இந்திய காங்கிரசு செயற்குழு விளக்கம் தந்துள்ளது. டாடா இரும்பு எஃகுத் தொழிற்சாலையின் பொன்விழாவை ஒட்டி நடந்த பொதுக் கூட்டத்தில் பேசிய ஒரு பங்குதாரர் "தேர்தல் காலத்தில் மட்டும் காங்கிரசுக்கு மொத்தத்தில் மூன்றரை கோடி ரூபாய் கம்பெனிகளிடமிருந்து வசூலிக்கப்பட்டது," என்று குறிப்பிட்டுள்ளார். கம்பெனிகளிடமிருந்து பெறப்பட்டதாக இல்லை; வசூலிக்கப்பட்டதாகக் கூறுகிறார். வசூலித்தல், பெறுதல் இந்த இரண்டு சொற்களுக்கும் இடையே உள்ள வேற்றுமை உன்னிப்பாக கவனிக்கத் தக்கது. எனவே காங்கிரசுக் கட்சி எந்த வகையில் தேர்தல் காலத்தில் பணம் திரட்டியது என்பது தெரிகிறது. இது தான் காமராசர் கூறிய 'நல்ல முறையோ' என்னவோ? காங்கிரசின் தேர்தல் நிதிக்கு டாட்டா நிறுவனங்கள் மட்டும் பத்து லட்சத்து முப்பதினாயிரம் ரூபாய் வழங்கியது. ஏன் என்று கேட்ட நிருபர்களுக்கு தொழிலதிபர் திரு. டாடா "தனியார் துறையும் பல திறப்பட்ட பொருளாதாரமும் காங்கிரசார் ஆட்சி ஒன்றில்தான் இயங்க முடியும். ஆகவேதான் மற்ற கட்சிகளைவிட காங்கிரசு வெற்றி பெறுவதை நாங்கள் விரும்புகிறோம்" என்றார். புரிகிறதல்லவா, மாதிரி சோசியலிசக் காங்கிரசு' பணம் திரட்டும் 'நல்ல முறை'? இப்படியெல்லாம் பணம் கொடுத்த டாடா நிறுவனம் உலக பாங்கியிலிருந்து டில்லி மூலவர்களின் துணையால் 60 கோடி ரூபாய் 'கடனுதவி பெற்றுள்ளது — குடியாட்சிப் பண்பு கொலை செய்யப் படுகிறது.

தொடர்ந்து பேசிய திரு. காமராசர் தொழிலாளர்களையும், மாணவர்களையும் காங்கிரசு வளர்ச்சிக்கு துணை கொள்ள வேண்டிய அவசியத்தை வற்புறுத்தியுள்ளார். வெள்ளையன் வெளியேறுவதற்கு முன்பு, இன்று வகுப்புவாதி என்று சிறையிலே கொலைக் குற்றம் சாட்டப்பட்டு அடைபட்டிருக்கும் திரு. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் துணை தேவைப்பட்டது. இப்பொழுது தேர்தல் காலத்தில் முன்னால் அவர்களாலே வகுப்புத்துவேஷி என்று வசைமாரி பொழியப்பட்ட பெரியாரின் பெரும் துணை அவசியப்பட்டது. வெற்றி பெற்ற காமராசர் இன்று பெரியாருக்கு நேராகவே அடக்குமுறைகளை அவிழ்த்து விடுகிறார். அறுபதாண்டுகள் வரை அண்ணன் தம்பி அக்கரைக்குப் போன பின் நீ யார்; நான் யார் என்று கேட்கிறார் காமராசர். அறிஞர் அண்ணா அவர்கள் முன்பு ஒருமுறை குறிப்பிட்டது போல 'வரம் பெற்ற பத்மாசூரன் வரம் தந்த சிவபெருமானையே பதம் பார்க்க ஆரம்பித்து விட்டான். இனிமேல் பத்மாசூரனை தொலைப்பதற்காக மோகினி அவதாரம் எடுக்க எந்த விஷ்ணு வரப்போகிறார்' என்பதுதான் புரியவில்லை.

கடந்த ஐந்து ஆண்டுகளில் காங்கிரசுக் கட்சி பெற்றுள்ள வளர்ச்சி பெரியதொரு வீழ்ச்சியாகவே தோன்றுகிறது. காமராசர் சென்னையில் பேசிய அதே நாளில் பண்டிதர் நேருவின் பிறந்த இடமும், பண்டித பந்தின் சொந்த நிலமுமான ஐக்கிய மகாணத்தில நடைபெற்ற 30 இடங்களுக்கான நகராட்சித் தேர்தலில் 25 இடங்களில் காங்கிரசு படுதோல்வி யடைந்துள்ளது. இது காங்கிரசு பெற்று வரும் வீழ்ச்சியைச் சுட்டிக் காட்டுகிறது. இதை அக் கட்சியைச் சார்ந்தோரும் நாட்டுக்குரியோரும் உணருவது நல்லது.

—நாஞ்சில் **செ. அன்பெழில்**



அறிவுச் செல்வம்

தொகுத்தவர்: எஸ். குமரேசன்

பொறுமையோடு சிரமமும் நிறைய எடுத்துக் கொண்டு, லகப் பேரறிஞர்கள், எழுத்தாளர்கள், தலைவர்கள் ஆகியோரின் சிறந்த—பல துறைப்பட்ட அறிவுரைகளையும், பத்திரிகைகளி லிருந்து சேகரிக்கப்பட்ட பொன்மொழிகளையும் அகர வரிசைப் படுத்தித் தொகுத்துள்ளார் இந்த ஆசிரியர். அதிலும் எல்லாத் தரப்பு மக்களும் திருப்தியடையுமாறு பொது நோக்கோடு முயற்சித்துள்ளார். 356 பக்கங்களுள்ள இந்நூலுக்கு விலை ரூ. 3—00 என்பது அதிகமாகத் தோன்றினாலும், பயனுள்ள நூலென்பதால் பரவாயில்லையென்றே கருதலாம்.

வெளியிட்டோர்:

எஸ். எம். ஜகந்நாதம், நாகர்கோயில்.

தங்க நகரம்

ஆசிரியர்: அகிலன்

தமக்கெனவோர் தனி நடையும் சிறுகதையுலகும் அமைத் துக் கொண்டுள்ள நண்பர் அகிலன் குழந்தைகளுக்காக குழந்தை நடையில் கருத்துள்ளதாக எழுதியுள்ள இச் சிறுகதையை நல்ல கொட்டை எழுத்துக்களில் — கெட்டியான முறையில் — தேவை யான படங்களும் சேர்த்து மிகமிக கவர்ச்சிகரமான முறையில் தயாரித்துள்ளார்கள்.

விலை ரூ. 1—00

வெளியிட்டோர்:

தமிழ் நிலையம், புதுக்கோட்டை.

டாக்டரம்மா

எழுதியவர்: கே. ஏ. மதியழகன்

முதல் டாக்டரம்மா, வெந்தணலில், கவிழ்ந்த படகு, கேரள கீதம், ஒரே நிலவு, மேக மண்டலந்தாண்டி, கரிபால்டி ஆகிய ஏழு கட்டுரைகளின் தொகுப்பாகும் இந்த நூல். அழகு சொட் டும் நடையில், அறிவு மிளிரும் வகையில், கருத்துச் செறிவும், வரலாற்று விளக்கமும் ஒளிர கட்டுரை தீட்டும் ஆற்றல் தமக்கு உண்டெனக் காட்டும் முறையில் நண்பர் மதியழகன் தீட்டி யுள்ள இவைகளைப் பள்ளி மாணவர்களும் மற்றோரும் அவசியம் படித்துப் பயன்பெற வேண்டும். கதை போலச் சம்பவங்களை அடுக்கிச் செல்லும் 'பாணி' மகிழத்தக்கது.

விலை ரூ. 1

வெளியிட்டோர்:

திராவிடப் பண்ணை, திருச்சி-2.

அபிராமசுந்தரியின் குடும்ப ரகசியம்

எழுதியது: 'மேதாவி'

திரண்ட செல்வத்துக்கு உரிமை படைத்த ஒரு பெண், குழந்தைப் பருவத்திலேயே இறந்து விட்டதாகக் கருதப்படுகிறது. அந்தக் காரணத்தால் தனக்கு அந்தச் சொத்துக்கள் கிடைக்க வேண்டுமென்ற பேராசையில் தன் தாயாரையும் சகாக்களையும் ஈவிரக்கமின்றிக் கொல்லவும் துணிகிறான் ஒருவன். அந்தச் சூழ்ச்சிக்காரன் பாதுகாப்பில் தன்னையறிந்து கொள்ளாமலிருந்த ஒரு அழகியைக் காதலித்து; அவள்தான் மறைந்துவிட்ட சீமாட்டி யென்பதை நிரூபிக்கிறான் ஒரு துப்பறிவோன். கதையின் முற் பகுதியைப் படிக்கும்போது ஒரு சமூகக் கதையைப்போல் செல் கிறது. ஆனால் பிற்பகுதியில் நிறைந்திருக்கும் அநேக சம்பவங் களில் சில நம்பத்தக்கதாய் இல்லை. அவைகளையும் நம்பும் பான் மையில் அமைந்திருந்தால் ஒரு துப்பறியும் கதையல்ல; நல்ல சமூகக் கதையையே கிடைத்திருக்கும்! 'மேதாவி'யின் நடை—வழக்கம் போல் தடையின்றி ஓடுகிறது.

விலை ரூ. 1—50

வெளியிட்டோர்:

பிரேமா பிரசுரம், சென்னை—24.

பிறைவானம் ....

[11—ம் பக்கத் தொடர்ச்சி]

ஆனால் கந்தன் மறுகணம் எழுந்து தன் குடிசைக்குள் ஓடிவிட்டான்!

கந்தன் உள்ளே ஓடிவிட் டானே தவிர, அவன் உள்ளம் என்னவோ உள்ளே அடங்க மறுத்தது. இறக்கை கட்டி— மேலே எழுந்து — விண்ணிலே பறந்து — அது ஏன் பங்களா வையே வட்டமிட்டுக் கொண் டிருக்க வேண்டும்? பங்களா அழகாக இருக்கிறதே; தோட் டம் பெரிதாக இருக்கிறதே; விளையாட்டுச் சாமான்கள் அதிக மாக இருக்கின்றனவே — என்ற காரணமா? இல்லை; அதற்கெல் லாம் ஆசைப்படவில்லை கந்தன். அந்த பங்களாவிலே பாசம் கொண்ட பிஞ்சு நெஞ்சு ஒன்று இருக்கிறதே: அது அவன் மேல் பரிவு காட்டுகிறதே—இதென்ன விசித்திரம் என்ற ஆச்சரியம் தான்! அந்த ஆச்சரியம் ஆவ லாக மாறி அவனை குடிசைக் குள் இருக்க விடாமல் தடுத் தது.

மெதுவாக குடிசைக்குள்ளி ருந்து வெளியே தலையை நீட் டினான். அவன் கண்கள் தூரத் திலிருந்து பங்களாவின் மாடியை ஆவலுடன் நோக்கின. இருள் படர்ந்து கொண்டிருந் தது. ஆனால் அவன் கண்கள் எதையோ தேடின. அவன் கண்களில் திடீரென்று ஏமாற் றம் தோன்றியது. ஆமாம்; அங்கே செல்வ குமாரைக் காண வில்லை!

கந்தனுக்கு மனக் கலக்கம் உண்டாகியது, பணக்காரன் வீட்டு நட்பெல்லாம் இப்படித் தான் போலும்; ரயில் சிநேகம் மாதிரி! அதற்குள் அவனுக்கு என்ன மகிழ்ச்சி வந்து விட் டதோ; புதுப் பொம்மையோ; ருசிகரும் ரொட்டியோ; யார் கண்டார்கள்? இனி நம் நினைவு ஏன் ஏற்படப் போகிறது— என்று மனதிற்குள் எண்ணிக் கொண்டான் கந்தன்.

★

நன்றாக இருட்டிக் கொண்டு வந்தது—முன்னிருட்டுக் கால மல்லவா?

அம்மா, அப்பா எல்லோரும் படுத்துத் தூங்கி விட்டார்கள். கந்தன் குடிசை வாசலில் உட்கார்ந்து வானத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். சந்திரனை இன்னும் காணோமே என்று தேடிக் கொண்டிருந் தன அவனது கண்கள்!

ஆனால் அப்போது அவன் தேடாத ஒன்று அவனுக்குப் புலப்பட்டது. கந்தன் திடுக் கிட்டு விட்டான். செயற்கைச் சந்திரனோ—அதிலே செத்து விட்ட நாயோ அல்ல அவன் பார்த்தது. முன்னிருட்டிலே அவனது குடிசையை நோக்கி ஓடிவந்து கொண்டிருந்த ஓர் உருவத்தைத்தான் அவன் கண்டு விட்டான்.

"கந்தா.."—இரைக்க இரைக்க ஓடிவந்து அவன் எதிரே நின்ற செல்வ குமாரைக் கண்டதும் அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"ஐயையோ!...என்ன இது? இங்கு ஏன் வந்தே?...போ... போய்விடு!..." என்று அலறி னான். 'பங்களாவிற்குள் நுழை யாதே' என்று அவனைத் தடுத் தது, அதிகாரம்! 'குடிசைக்குள் நுழையாதே' என்று இவனும் தடுக்கிறான். அதிகாரத்தால் அல்ல; அச்சத்தால்!

"கந்தா!...நான் போகிறேன். ஆனால் நீயும் என்னுடன் வா, கந்தா! அப்பா தூங்கி விட் டார். நாம் ரெண்டு பேரும் தோட்டத்திலே 'சீ—சா' விளை யாடுவோம்!......அதோ பார், நிலவுகூட வரத் தொடங்கு கிறது!..." என்று அவசர அவ சரமாகப் பேசினான் செல்வ குமார். அவன் குரலில் ஒரே படபடப்பு! மாளிகையை விட்டு துணிந்து முதல் முறையாக அல்லவா இப்போது வெளியில் வந்திருக்கிறான்!

"நான் மாட்டேன்!..." என் றான் கந்தன்.

"நான் விடமாட்டேன்!..." என்றான் செல்வ குமார்.

"போய்விடு!..." என்று கெஞ் சினான் கந்தன்.

"நீயும் வந்துவிடு..." என் றான் செல்வ குமார்.

அவன் முகத்தைப் பார்க்க— குரலைக் கேட்க—மிகவும் பரி தாபமாக இருந்தது கந்தனுக்கு. அவன் தூய உள்ளத்தைத் தான் புண்படுத்துவதாக எண் ணினான். மறுகணம் புறப்பட் டான்.

★

நேர்வழி புகுந்தால் 'கூர்க்கா' வின் கண்களில் சிக்கிவிடுவார் களல்லவா! ஆகவே தோட்டத் துச் சுற்றுச் சுவர் ஏறி குதித்து விடுவது என்று முடிவு.

முதலில் கந்தன் சுவர் தாண்டி கீழே குதித்துவிட்டான். அவன் உடல் நடுங்கிக் கொண்டிருந் தது. அடுத்தாற்போல் செல்வ குமார் சுவற்றின்மீது ஏறினான். ஆனால்...அவன் கீழே குதிக்கும் முன்பாக ஒரு நெஞ்சுளுக்கும் பயங்கரம் அங்கே நிகழ்ந்து விட்டது!

இரவில்— சுவற்றின் மேல் நின்ற உருவம் யாருடையது என்று புரிந்து கொள்ள முடி யாத காரணத்தால்—விழித்துக் கொண்ட 'கூர்க்கா'வின் கம்பு செல்வ குமாரின் மண்டையிலே வேகமாகத் தாக்கியது!

"ஐயோ!..." என்று அலறிக் கொண்டே தோட்டத்திற்குள் சாய்ந்தான் செல்வகுமார். அந்த அலறல் பங்களாவையே எழுப்பி விட்டு விட்டது!

சீமான் ஓடோடியும் வந்தார். மண்டை உடைந்து இரத்த வெள்ளத்திலே கிடந்த செல்வ குமாரையும், பக்கத்திலே நின்று கொண்டு கதறிக் கொண்டி ருந்த கந்தனையும் அவர் கண்கள் கண்டு விட்டன. ஆனால்...இப் போது அந்தக் கண்களில் கோபம் தெரியவில்லையே! இல்லை தான்—உண்மைதான்!......கண் ணீர் ததும்பி நின்றது!

★

'சீ—சாவி'ல் உட்கார்ந்து விளையாடிக் கொண்டிருந்தார் கள் இருவரும்-கந்தனும் செல்வ குமாரும்தான்!

ஆனால் பெரிய மாற்றம்!

கந்தனின் உடை, செல்வ குமாரின் உடைக்கு ஈடாக இருந்தது!

அவன் 'சீ—சா'வின் அடியி லேயே இல்லை. அவனும் மேலே எழும்பினான் — சிரித்துக் கொண்டே விளையாடினான்.

இவைகளனைத்தையும் வியக் வியக்கத்தக்க மாற்றம்...பங்க ளாவின் சொந்தக்காரரான அந்தச் சீமான் இந்தக் காட்சி யைக் கண்டு சிரித்துக் கொண் டிருந்தார். "அன்பிற்கு முண்டோ அடைக்குந் தாழ்?..." என்று துவங்கும் குறள் ஏடு ஒன்று விரித்தபடி அவரது கைகளில் இருந்தது!

—சோ

உயர்வும் ★ ★ ★ ★ தாழ்வும்!

புலியும் புள்ளிமானும் ஒரு துறையில் நீரருந்த முடியுமா?

—இந்த சந்தேகம்தான் அப்போது வந்து விட்டது, அந்த மாட்டுக்காரச் சிறுவனுக்கு!

அவன் யோசித்தான். உலகில் நடக்கக் கூடாத அதிசயங்கள் நடப்பதாகச் சொல்லிக் கொள்கிறார்களே; அவைகளைப் போன்ற ஒன்றுதானா இது?

—இப்படி ஒரு கேள்வி அவன் நெஞ்சில் மீண்டும் எழும்பி நின்றது!

"ஏண்டா கந்தா சும்மா நிக்கிறே?...உம்...ஏறி உட்கார்!..."

எதிரே நின்று கொண்டிருந்த 'சின்ன முதலாளி'தான் இப்படிச் சொன்னான்.

—புலி உறுமுவதாகத் தோன்றியது கந்தனுக்கு! ஆனாலும் அந்தக் குரலிலே கனிவு இருந்தது; பரிவு இருந்தது; பாசம் இருந்தது! ஆனால் எதிரே 'பலிக்கடா' போல் நின்று கொண்டிருந்த கந்தனின் உள்ளத்திலே மட்டும் பொல்லாத பயம் இருந்தது!

"கந்தா...ஏன் பயப்படுறே சும்மா ஏறி உட்கார்!...இதுக்குதான் "சீ—சா" ஆட்டம் என்று பெயர்! இந்தத் தோட்டத்திலே எத்தனையோ விளையாட்டுச் சாமான்கள் இருக்கு! எல்லாத்திலேயும் தனியா விளையாடலாம்; ஆனால் இதில் மட்டும் துணையில்லாமல் விளையாட முடியாது! தெரிகிறதா? இந்தப் பக்கம் நான் — அந்தப் பக்கம் நீ உட்கார்ந்தால், இது மேலும் கீழும் ஏறி ஏறி இறங்கும்— ரொம்ப வேடிக்கையாக இருக்கும்!..."

சின்ன முதலாளி — சீமான் மகன் — செல்வ குமார் என்று பெயர் கொண்டவன் இப்படி 'சீ—சா' விளையாட்டைப் பற்றிப் பேசிக் கொண்டே சென்றான். அவனுக்கல்லவா தெரியும், துணையின்றி அவன் திண்டாடிய தொல்லை! தோட்டத்திலே ஒரு மூலையில் ஊஞ்சல் இருந்தது; அதில் தனியாக விளையாடலாம்! ஆடும் குதிரை இருந்தது; அதற்குத் துணை தேவையில்லை; அந்தக் குதிரை ஒரு உடலைத் தான் தாங்கும்! ஆனால்...அந்த 'சீ—சா'......அதில் விளையாட வேண்டுமானால் துணை இல்லாமல் நடக்குமா? அதை வாங்கிக் கொடுத்த அப்பா, தன் ஒரே அன்பு மகனுக்குத் துணையாரும் இல்லையே என்று, ஏன் யோசிக்கத் தவறி விட்டார்? இப்படி பல நாட்கள் யோசித்துப் பார்த்தான் செல்வகுமார். அத்துடன் 'சீ—சா'வில் விளையாட வேண்டும் என்ற ஆவல் வேறு தலை எடுத்து நின்றது. என்ன செய்வான்? துணைதேடினான். நேற்று வரை 'நட்பு' என்றபதத்தின் பொருளைப் புரியாதவன்; 'நண்பன்' என்று ஒருவனைப் பெற்றிருக்காதவன்; இன்று அந்த அவசியத்திற்கு விரட்டப்பட்டான். தேடினான்; தெருவழியே மாடோட்டி சென்று கொண்டிருந்த கந்தன்தான் அவன் கண்களில் முதலில் தென்பட்டான். விழிகளைக் கொடூரமாக வைத்துக் கொண்டு வாசலில் நின்று கொண்டிருந்த 'கூர்க்கா'வை மெதுவாக எங்கேயோ அனுப்பிவிட்டு, கந்தனைக் கை தட்டி அழைத்தான்.

கந்தன் பயந்த சுபாவம் கொண்ட சிறுவன். முதலாளி வீட்டு மாடுகளை வயலுக்கு ஓட்டிச் செல்வது; குளிப்பாட்டி விடுவது-இந்தத் தொழில்தான் தங்களுக்கான 'தாசில்தார்' உத்யோகம் என்று எண்ணிக் கொண்டிருப்பவன். அவன் எப்படி கூப்பிட்டவுடன் பங்களாத் தோட்டத்திற்குள் நுழைந்து விடுவான்? இருந்தாலும் செல்வகுமார் விடவில்லை. இழுத்துக் கொண்டு உள்ளே ஓடிவிட்டான். அதுமட்டுமல்ல; "ஏறி உட்கார் 'சீ—சா'வில்" என்று அன்பு ஆணையும் இட்டு விட்டானே!

முதலில் செல்வ குமார் ஒரு முனையில் ஏறி உட்கார்ந்தான். அப்போது 'சடக்'கென்று மேலே ஏறிவிட்டது செல்வ குமாரின் பக்கம். கீழே தரையோடு தரையாக ஒட்டிக்கொண்டிருந்தது கந்தன் உட்கார்ந்திருந்த முனை.

"கந்தா! என்ன 'ஜோரா' இருக்கு!...நான் எவ்வள்வு உயரத்திலே இருக்கேன்; பார்த்தியா!...ஆனால் நீ..."—செல்வ குமார் மறுபடியும் சிரித்தான்.

கந்தனின் உள்ளத்திலே கண நேரத்திலே ஒரு கீறல்!

"நான் எவ்வளவு உயரத்திலே இருக்கேன்; பாத்தியா?... ஆனால் நீ...?..."—செல்வ குமார் முடிக்காத — ஆனால் அவனுக்குச் சிரிப்பைத் தந்த அந்த சொற்கள், கந்தனுக்குப் பெரும் குழப்பத்தையே உண்டாக்கி விட்டது!

ஆமாம்; செல்வ குமார் மேலே இருப்பவன் — ஆனால் கந்தனோ கீழே கிடப்பவன்! அவன் சீமானின் செல்வன்; உப்பரிகையும் உல்லாச வாழ்வும் அனுபவிப்பவன் — ஆனால் கந்தன்...சமூகத்தின் அதள பாதாளத்தில்—சாக்கடைக் குழியில் நெளியும் புழுவுக்கு ஒப்பானவன்! இன்று நேற்றல்ல; ஆண்டாண்டு காலமாக — 'சரித்திர'த்தின் முதல் எழுத்து உருவாகத் துவங்கிய காலம் முதல் நிலவி வருகின்ற நிலைமை இது! ஆனால் அந்த இரு துருவங்கள் இன்று ஒன்றாக அல்லவோ சேர்ந்து விட்டிருக்கின்றன! முடியுமா? நடக்கலாமா அது? கந்தனின் குழம்பிய உள்ளத்திலே இப்படி எவ்வளவோ எண்ணங்கள் தோன்றி கண நேரத்தில் அவனைப் பைத்தியக்காரனைப்போல ஆக்கிவிட்டது!

"ஏன் சும்மா இருக்கிறாய் கந்தா! நீ கீழேயே இருக்கக் கூடாது!...நீயும் மேலே வர வேண்டும்......உம்..." — என்று ஆட்டத்தின் 'விதி'யை விளக்கினான் செல்வ குமார்!

ஆனால் கந்தன், சமுதாய 'விதி'க்கு மாறாக — தன் 'தலை விதி'க்கு எதிராக—தான் ஏதோ மாபெரும் குற்றம் செய்வதாக உணர்ந்தான்.

"டேய், யாரது?..."

அப்போது பின் புறத்திலிருந்து எழும்பியது இந்தக் குரல்! உறுமும் புலியைப் பார்த்தது கிடையாது கந்தன். ஆனால் புலியின் குரலையும், உருவத்தையும் கொண்ட மனித உருவத்தை முதன் முதலாக சந்தித்தான்!

"அப்பா!......இவன் நம்ப மாட்டுக்காரன் மகனும்ப்பா! நான் 'சீ—சா' ஆட்டத்துக்குக் கூப்பிட்டுக்கிட்டேன். இனிமே தினம் இவனோடேயே விளையாடுறேனப்பா! இவன் ரொம்ப ரொம்ப நல்லவனப்பா!......"

செல்வ குமாரின் பேச்சு முடியவில்லை—"சீ!" எனச் சீறிப் பாய்ந்தார், அந்த சீமான்! மறுகணம் அவர் கண்கள் இரத்தச் சிவப்பாயின. 'மாட்டுக்காரப் பயலுக்கு இந்த மாளிகையிலே என்ன வேலை? மகா பாபம்! மகா பாபம்!' என்று சொல்லாமல் சொல்லியது அந்தக் கண்கள்!

'சீ—சா'விலிருந்து தன்னையும் மீறி கீழே குதித்தான், கந்தன். அவன் உடல் வெடவெட வென்று நடுங்கிக் கொண்டிருந்தது!

"சீ, பிச்சைக்கார நாயே! உனக்கு என்ன திமிரடா, இவனோடு சமமாக உட்கார்ந்து விளையாட....ஓடிப்போ கழுதை!" என்று உறுமினார் அப்பா! கையிலிருந்து ஊன்றுகோல் அவனது உடலைப் பதம் பார்க்கப் போகுமுன்,விலகிக்கொண்டு ஓட ஆரம்பித்தான் கந்தன்!

"அப்பா!...அப்பா!..." என்று தன் பத்து ஆண்டு வாழ்க்கையிலேயே முதல் முறையாக அலறினான்; இல்லை; அழுதான் செல்வ குமார்!

பணத் திமிருக்கு முன் அந்த பாசத் துடிப்பு எம்மாத்திரம்?

கந்தன் வீதிவழியே விரட்டப் பட்டான்; செல்வ குமார் மாளிகைக்குள் விரட்டப்பட்டான்!

தலை தெறிக்க வயல் வரப்புகளில் விழுந்தடித்துக்கொண்டு ஓடிக்கொண்டிருந்தான் கந்தன். திரும்பியும் பார்க்காது ஓடிக் கொண்டிருந்த அவனை "கந்தா" என்ற குரல் திரும்ப வைத்தது. பயந்துகொண்டே திரும்பினான். அழைத்தது யார்? தேடினான். பக்கத்தில் யாருமே இல்லை! ஆனால்...அந்த அழைப்பு மீண்டும் எழுகிறதே!

கந்தன் மறுபடியும் பார்த்தான். பங்களாவின் உப்பரிக்கையிலே நின்று கொண்டிருந்த செல்வ குமார்தான் இருகரம் நீட்டி— இருதயப் பாசத்தோடு அழைத்தான்!

அவனது கதறலைக் கந்தன் ஏற்றுக் கொள்ள முடியுமா? 'வேண்டாம்; வேண்டாம்!' என்று இரு கைகளையும் அசைத்து, அழைப்பை மறுத்தான். "நீ மேலே இருப்பவன்; நான் கீழே கிடப்பவன்! நீயும் நானும் ஒன்றாக முடியாது" என்று கத்தினான். குடிசையை நோக்கி ஓட ஆரம்பித்தான்!

குடிசை வாசலில் உட்கார்ந்திருந்த தன் அம்மாவிற்கு அருகில் போய் அமர்ந்த பின்னும் கந்தனின் உடல் பதட்டம் அடங்கவில்லை; பயம் குறையவில்லை. புலியைச் சந்தித்து—தப்பி வந்துவிட்ட புள்ளி மானின் நிலையிலேயே அவன் இருந்தான்.

"ஏன் கண்ணு; உன் உடம்பெல்லாம் இப்படி நடுங்குது?" என்று அவனை ஆசையோடு அணைத்துக் கொண்ட அம்மா இப்படிக் கேட்டாள்.

"அதோ இருக்கிறதே; நம்ம எஜமானின் பங்களா—அதற்குள்ளே போய் விட்டேனம்மா!..." என்று தான் செய்த 'தவறை' சொல்லிக் கொண்டே பங்களா இருந்த திசையில் கையைக் காட்டினான் கந்தன். அப்போது தற்செயலாக அவன் கண்கள் பங்களா மாடியைக் கவனித்தன. அங்கே இன்னும் நின்றுகொண்டிருந்தான் செல்வ குமார். அது மட்டுமல்ல; அவனது கரங்கள் கந்தனை நோக்கி அசைந்து கொண்டிருந்தன!

[தொடர்ச்சி பக்கம்—10]





டி. வி. முத்துகிருட்டிணன்,
திருவையாறு

(?) வடநாடு; தென்னாடு—இந்த உறவு ஏன் முறிய வேண்டும் என்கிறீர்கள்?

இப்போது நீங்களேதான் பார்க்கிறீர்களே; அந்த வடக்கத்தி சீமாட்டி அமெரிக்காவின் அந்தப்புரத்திற்கு ஓடுகிறாள்; ஜெர்மனோடு பிச்சைக்குப் போகிறாள்; அகப்பட்டநாடுகளுடன் காசுக்குக் கொஞ்சுகிறாள்; பொல்லாதன பேசுகிறாள்! அந்தப் பெண்ணுடன் விவாகரத்து கோரி, தனியாக வாழ விரும்புவதில் தவறென்ன இருக்க முடியும்?

எம். ஆர். பி. கண்ணன்;
அயன்புரம்

(?) கிருஷ்ணமாச்சாரியாரின் எதிர்காலம் எப்படி இருக்கும்?

அவர் அமர்ந்திருக்கும் நிதி அமைச்சர் பீடம் மிக மிக ஆபத்தானது—யாரையும் நீண்ட காலம் நிலையாக உட்காரவிடாத இடம்! ஆர். கே. சண்முகம், ஜான் மத்தாய், தேஷ்முக் போன்றோர் 'வேண்டாத காரணத்தால் விரட்டியடிக்கப்பட்ட அந்த இடத்தில், எடுத்த முயற்சிகளில் எல்லாம் தோல்வியே அடையும் டி. டி. கே. மட்டும் எவ்வளவு காலம் இருந்து விடப் போகிறார் என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டிய ஒன்றாகும்!

கே. கே. கருணாகரன்;
சிக்பேட்-பெங்களூர்

(?) 'ராமராஜ்ய'த்தின் பெருமையைக் காட்டும் சமீபத்திய தமிழகச் செய்திகள் ஏதேனும் உண்டா?

நிறைய இருக்கின்றனவே! 'முதுகுளத்தூர் பெருமைக்'குப் பிறகு, கரூரில், காந்தியாரின் படத்துக்கு முன்னே ஐந்து பேர்களைக் கொண்ட ஒரு குடும்பமே தற்கொலை செய்து கொண்டதாம்!

அமைச்சர் வெங்கட்ராமன் தமிழர்கள் அரிசி உணவுக்குப் பதில் கோதுமையால் செய்யப்பட்ட பூரி, சப்பாத்தி—இவற்றையே சாப்பிட்டுப் பழகவேண்டும் என்று பேசியிருக்கிறார்!

—இவை மட்டுமல்ல; இன்னும் நிறைய.........தவறாது தினத்தாட்களைப் படித்து வாருங்கள்!

பி. கே. சௌந்தர்;
மேலகற்கண்டார்கோட்டை

(?) எனக்கு தீமை செய்த ஒருவனை நான் பழிவாங்க விரும்புகிறேன்; அதற்கு ஒரு வழி சொல்லுங்கள்.

வீரத்தோடு பழிவாங்கும் முறை இதுதான்: பழி வாங்குவதின் முதற் கட்டம் அவனை அலட்சியப்படுத்தி விட வேண்டும்; இறுதிக் கட்டம் அவனை மன்னித்து விடுவதுதான்!

கோ. மணி; பூங்குளம்

(?) பண்டித நேருவின் பிறந்த நாளுக்கும், குழந்தைகள் தினக் கொண்டாட்டத்துக்கும் என்ன சம்பந்தம்?

வயதானவர்கள் குழந்தைக்குச் சமம் என்கிறார்கள் அல்லவா!

சி. சு. தேவராசன்; சிறுதையூர்

(?) நீங்கள் சட்ட சபையில் பேசும்போது காமராசர் என்ன செய்துகொண்டிருப்பார்?

சிரிக்கிறார்; பேசவேண்டிய சங்கடம் அவருக்கில்லாததால்!

பி. டி. ஐ. ராமதுரை;
சிங்கபெருமாள்கோவில்

(?) செயற்கைச் சந்திரனுக்கும் நேருவுக்கும் வித்தியாசம் உண்டா?

இல்லை! ஒற்றுமைதான் உண்டு; உலகைச் சுற்றி வருவதில்!

வே. ப. தருமன்; சத்திரக்குடி

(?) தாழ்த்தப்பட்டவர்களை "ஹரிஜன்" என்று அழைப்பது ஏன்?

"ஹரிஜன்" என்றால் மகாவிஷ்ணுவின் மக்கள்; மனிதர்கள் என்று ஒப்புக் கொண்டால் அவர்களை சமமாக நடத்த வேண்டுமே!

பா. இரஞ்சிதமணி;
குமாரபாளையம்

(?) ஒரு நண்பனின் அன்பைப் பெற வழி யாது?

கொடுத்த கடனைத் திரும்பக் கேளாதிருத்தல்!

எஸ். மாரியப்பன்; காட்டுப்புத்தூர்

(?) புதிய காசு வந்த பிறகு, பிச்சைக்காரர்களின் பிழைப்பு எப்படி இருக்கிறது?

முன்பு நான்கு பேரிடம் கை நீட்டினால் ஓரணா; இப்போது ஆறு பேரை யல்லவா தேட வேண்டியதாகியிருக்கிறது!

கே. எஸ். சௌந்தரம்; கூறைநாடு

(?) குறளில் உங்களுக்குப் பிடித்தமானது எது?

★★★★★★★★★★★★

இதழ்கள் விற்பனையின் இட மாற்றம்

புதுவையில், தோழர் கே. ஏ. ஜலீல், நெ. 25, துய்ப்ளேக்ஸ் வீதி என்ற முகவரியில் விற்கப்பட்டு வந்த இயக்க இதழ்கள் யாவும் இந்த நவம்பர் முதல் கீழ்க்கண்ட முகவரியில் கிடைக்கும்.

ச. சிவப்பிரகாசம்,
கண்ணன் சவுண்டு சர்வீஸ்,
90, காந்தி வீதி, புதுவை.

★★★★★★★★★★★★

புதிய முகவரி

தில்லை வில்லாளன் எம். ஏ.,
72—73, கடைத் தெரு,
சிதம்பரம்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்பதுதான்!

ஏ. கே. எஸ். மணியன்; வேலூர்

(?) ஏராளமான கருத்துகள் மனதில் தோன்றுகின்றன. ஆனால் எழுத்து வடிவில் கொண்டுவர முடியவில்லையே; ஏன்?

இதிலென்ன ஆச்சரியம்! மனத்தில் நினைப்பதை வாயால் சொல்ல முடியாமல் ஏராள மானவர் இருக்கிறார்களே; சட்டசபையில்கூட!

இராசன்; நாகர்கோயில்

(?) ஓட்டுக்கும், ஓட்டலுக்கும் வேறுபாடு இருக்கிறதா?

இருக்கிறதாம்! முந்தியதில் யாரை ஆதரிக்கிறோமோ, பிந்தியதில் அவரையே வெறுக்க வேண்டுமாம்!

பக்கிரிசாமி; பொறையார்

(?) இந்தியாவில் இந்தி பேசுவோரின் எண்ணிக்கைதானே தமிழ் பேசுவோரைவிட அதிகம்?

ஆமாம் — இந்தியாவில்தானே; திராவிட நாட்டில் இல்லையே!

எம். ஆர். அமிர்தகௌரி;
செங்குன்றம்

(?) பிடிக்காதவற்றை கொளுத்துகின்ற முறை சரிதானா?

சரியா; தப்பா—என்பது கொளுத்துகின்ற நோக்கத்தைப் பொறுத்தது! நம் நாட்டில் காங்கிரஸ்காரர்கள் முன்பு சீமைத் துணிகளைக் கொளுத்தியதும், மேல்நாட்டு மார்டின் லூதர் பைபிளைக் கொளுத்தியதும் தெரியும் அல்லவா?

தில்லை—கோவிந்தன்;
அண்ணாமலை நகர்

(?) ரஷ்ய செயற்கைச் சந்திரனில் பிரயாணம் செய்து கொண்டிருந்த நாய் இறந்து விட்டதாமே...?

அமெரிக்காவிலிருந்து செய்தி கிடைத்து, உங்கள் ஊர் ஜீவகாருண்ய சங்கத்தார் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றியிருப்பார்களே! ஆனால், ரஷ்யா அந்த விஷயத்தை இன்னும் விஞ்ஞான ரகசியமாகவே வைத்திருக்கிறது. எப்படியானாலும் மகத்தான விஞ்ஞான உண்மைகளைக் கண்டு பிடிக்க உதவிய அந்த "சின்னச் சீமாட்டி"யின் உலகப் புகழ் மனிதருக்குக்கூடக் கிடைப்பதில்லையே!

வரதன்; லால்குடி

(?) 'பாடபேட்டால் கிடைக்கும்' என்ற தத்துவம் ஏன் பிச்சைக்காரர்களுக்குத் தெரிவதில்லை?

நம்நாட்டுப் பிச்சைக்காரர்கள் தான் இந்தத் தத்துவத்தை ஒத்துக் கொள்வதில்லை. காரணம்; இங்கே பாடுபடுபவர்கள்தான் பலன் அடைவதில்லையே!

சி. கே. தேவன்; திருச்சி

(?) 'அழகாகப் பேசி' ஆபத்தை விளைவிப்பவர்கள்' என்று நம் மவர்கள்மீது குற்றம் சாட்டுகிறார்களே; அதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பேசித் தோற்றவர்கள், ஏசித் தீர்ப்பது இயல்புதானே! மேலும் அப்படிச் சொல்லும் 'மௌனிகள்'தான் என்ன சாதித்து விட்டார்கள்? பேசாத எறும்புகள்கூட எவ்வளவோ பாடங்களைப் புகட்டுகின்றனவே — இவர்களிடம் அதுவும் இல்லையே!

எஸ். சோமசுந்தரம்;
விஜயபுரம்—திருவாரூர்

(?) முற்றும் துறந்த முனிபுங்கவர்; மதம் காக்கும் தலைவர்—இருவருக்குமுள்ள வேறுபாடு என்ன?

முனிவரின் இறந்த காலம் சாக்கடை; மதத் தலைவரின் நிகழ் காலம் சாக்கடை; இருவரது எதிர்காலமும் ஆழம் காண முடியாத பயங்கரப் படுகுழி!

பி. ஆர். பாலன்; கோவை

(?) இயந்திரங்கள் சாதிப்பதை மனிதனால் செய்ய முடியுமா?

அந்த இயந்திரங்களைச் செய்தவனே மனிதன்தானே!

ஆர். டி. அரசு;
குன்னூர்—உதகமண்டலம்

(?) தி. மு. கழகத்தின் சட்டசபைப் பிரவேசத்தின் முதல் வெற்றி என்ன?

பழைய ஊமைகள் வாய் திறந்திருக்கிறார்கள்! தூங்கியவர்கள் விழித்துக் கொண்டிருக்கிறார்கள்!

இலக்கியம் வளர...

"சிந்தனையில் தோன்றுவதுதான் இலக்கியம். பிற நாட்டுச் சிந்தனையாளர்களின் கருத்துக்களை நம் நாட்டுப் பண்புக்கு ஏற்றவாறு மாற்றி அமைத்துக் கொள்ளுவதில் தவறில்லை. பிற மொழியில் தோன்றிய சிந்தனைகளை நம் சொந்தக் கற்பனையைக்கொண்டு, அபிவிருத்தி செய்து புது உருவம் கொடுப்பதும் வரவேற்கத்தக்கதே! அப்படித்தான் பல நாட்டு இலக்கியங்களும் வளர்ந்திருக்கின்றன. ஆனால், பிறர் எழுத்தை அப்படியே தமதாக்கிக்கொள்ளும் 'இலக்கியக் களவு' மன்னிக்கமுடியாத குற்றம். அதனால் இலக்கியமும் வளராது; எழுத்தாளரும் வளரமாட்டார்கள்."

—'ஆனந்த விகடன்' (10-11-57)

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும், மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128; மவுண்ட்ரோடு, தமிழ்நாடு, சென்னை—2